Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 26 10-07-1992 வெள்ளிக்கிழமை ஓசை 143

## பத்து நாட்களில் ஐந்துபேர் விசர் நாய் கடித்து பலி

யாழ். குடாநாட்டில் கடந்த பத்து நாட்களிலும் விசர் நாய்க் கடிக்கு உள்ளாகி ஐந்து பேர் மரணமடைந்துள்ளனர். மேற்படி விசர் நாய்க் கடிக்குள்ளானவர்கள் தொடர்ச்சியான சிகிச்சையை எடுக்காமையே காரணம் என வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இறந்தோரின் விபரம் வருமாறு; பெனடிக் பஸ்ரியான் (8 வயது, மவுங்காமல் வீதி, யாழ்ப்பாணம்), (7 ஆம் பக்கம் பார்க்க)

# இயக்கச்சிப் பகுதியில் கடும் சண்டை

# ராணுவ தரப்பில் பாரிய உயிரிழப்பு

## டாங்கி முற்றாக அழிப்பு அகோர எறிகணை வீச்சு

(நமது நிருபர்)

வாடியடிச் சந்தியில் இருந்து இயக்கச்சி நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று கடும் சண்டை மூண்டது. காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகிய சண்டை இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை தொடர்ந்து நடைபெற்றவண்ணமுள்ளது.

அகோரக் குண்டு வீச்சு, எறிகணைத்தாக்குதலுக்கு மத்தியில் இடம் பெற்ற இவ் உக்கிர சண்டையில் இராணுவத்தரப்பிற்கு பெரும் உயிரிழப்பு ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது. அத்தோடு "டாங்கி" ஒன்றும் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

இம் மோதலில் 18 புலிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்றுக் காலை 6-00 மணியளவில், வாடியடிச் சந்தியில் இருந்து இயக்கச்சி நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சங்கத்தியார் வயல் பகுதியில், கடும் சண்டை மூண்டது. இச்சண்டை நள்ளிரவு வரை தொடர்ந்தும் இடம் பெற்றதாகஅங்கிருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சண்டையின் போது இராணுவ முகாம்களிலிருந்தும், டாங்கிகளிலிருந்தும் இயக்கச்சி நோக்கி அகோர எறிகணை வீச்சும், விமானங்களில் இருந்து தொடர்ச்சியான குண்டு வீச்சும் இடம் (8 ஆம் பக்கம் பார்க்க)



போர்க்களத்தில் புலிகள்

## கூட்டுறவுச் சங்கச் சாரதி எறிகணை வீச்சுக்குப் பலி

(மண்டைதீவு)

கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவந்த வேலணை ப.நோ.கூ.சங்கத்திற்குச்சொந்தமான லொறி சாரதி கா.கோபாலன் லொறியை கிளிநொச்சியில் நிறுத்திவிட்டு யாழ்ப்பாணம் வரும் வழியில் கடந்த புதன்று இரவு பரந்தனில் சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலால் கொல்லப்பட்டுள்ளார். இவரது உடலை இவருடன் கூட வந்திருந்த கொள்வனவு முகாமையாளர் யாழ்ப்பாணம் கொண்டு வந்து அவரது உற (7 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மூன்று தமிழர்சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலை கரடியனாறுப் பகுதியில் ஊர்காவல் படையினரால் மூன்று தமிழ் மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய் காலை, வந்தாறுமூலையில் இரண்டு தமிழர்களும் புதன்கிழமை மாலை கரடியனாறில் வைத்து ஒருவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கரடியனாறு சம்பவத்தில் சிறுமி ஒருவர் காயமடைந்தார்.

## பல்கலைக்கழக புதிய அனுமதி முறை அமைச்சருடன் பேச்சு நடத்த கொழும்பிற்கு குழு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதி 1991, 1992 தொடர்பாக ஏற்பட்டிருக்கும் யாழ்ப்பாண மாணவர்களுக்கான பாதிப்புகளைப் பற்றி உயர் கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த குழு ஒன்று நாளை சனிக்கிழமை கொழும்பு செல்லவுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி அதிபர், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கச் செயலாளர், யாழ். இந்துக் கல்லூரி அதிபரின் பிரதிநிதி மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் சார்பாக ஒருவரும் இக்குழுவில் இடம்பெறுவர். கொழும்பிலிருக்கும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் த. மகாசிவம் இக்குழுவுடன் இணைந்து அமைச்சரைச் சந்திக்க [7 ஆம் பக்கம் பார்க்க]

## 91/92 கல்வியாண்டிற்கு 8,945 மாணவர் அனுமதி

1991 / 92 கல்வியாண்டிற்கு மொத்தம் 8,945 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றுள்ளார்கள். இவர்களில் மருத்துவம் - 891, பல் வைத்தியம் - 97, மிருக வைத்தியம் - 83, விவசாயம் - 379, உயிரியல் விஞ்ஞானம் - 944, பொறியியல் 1 - 589, பொறியியல் 2 - 102, பௌதிக விஞ்ஞானம் - 1273, கலைத்துறை - 2720, சட்டம் - 237, முகாமைத்துவம் - 701, வர்த்தகம் - 846, கட்டிடக்கலை - 50, அளவையியற்துறை - 43, பேர் என அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியக்குழு அறிவித்துள்ளது.

## 18 வேங்கைகள் வீரச்சாவு

இயக்கச்சிப்பகுதியில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்றகடும் மோதலில் பதினேழு வீரவேங்கைகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை ஈழவேந்தன் (சுப்ராபாலசுந்தரம் சதீஸ் மயிலிட்டி யாழ்ப்பாணம்), வீரவேங்கை கைமுகன் (அருணகிரி சற்குணராசா வேலணை யாழ்ப்பாணம்), வீரவேங்கை கேரனா (வசந்தாரூபி தில்லையம்பலம் 3ஆம் குறுக்குத்தெரு பொம்மைவெளி அராலி வீதி), வீரவேங்கை வீமா (ரவீந்திராதேவி தங்கராஜா நவக்கிரி, புத்தூர்), வீரவேங்கை வதனி (பவானி சின்னன் யோகபுரம் மல்லாவி), வீரவேங்கை குமாரவேல் (சிவப்பிரகாசம் பிரமசீலன் நீலியம்பனை ஒழுங்கை வல்வெட்டித்துறை), வீரவேங்கை புலவன் (பொன்னையா மதியழகன் புதூர்திமிலைதீவு, மட்டக்களப்பு), வீரவேங்கை தமிழ்மாறன் (நெல்லிநாதன் விவேகானந்தன் அராலி வடக்கு வட்டுக்கோட்டை), வீரவேங்கை ஆதவன் (குகதாஸ் திருமாறன் புதுவளவு ஒழுங்கை வல்வெட்டித்துறை) வீரவேங்கை செழியன் (சீனுகாந்தன் குமணன் நடராசா வீதி, வல்வெட்டித்துறை) வீரவேங்கை சொக்கன் (சின்னா-கிறிஸ்ரி ராஜ்மோகன் ஆலடிச் சந்தி நல்லூர்), வீரவேங்கை சந்திரபவான் (அலோசியஸ் சுந்தரலிங்கம் மோகனதாஸ் [8ஆம் பக்கம் பார்க்க]

## மாவீரர் புகழுடல்கள் இறுதி அஞ்சலிக்கு

இயக்கச்சிப் பகுதியில் நேற்றுசிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கைகளினது புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக இன்று பொது இடங்களில் வைக்கப்படவுள்ளன.

வலிகாமம் பகுதியைச் சேர்ந்த வேங்கைகளினது புகழுடல்கள் இன்றுமாலை 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், வடமராட்சி, தென்மராட்சிப் பிரிவைச் சேர்ந்த மாவீரர்களது புகழுடல்கள் அந்தந்தப் பகுதியில் பொது இடம் ஒன்றிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். அதன் பின்பு அஞ்சலிக்கூட்டம்நடைபெறவுள்ளது

இதனைத் தொடர்ந்து புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அந்தந்தப்பகுதி மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித புதைகுழிகளில் விதைக்கப்படும்.

## ராணுவம் செய்யும் கொலை; விசாரிக்க இயலாதவாறு சட்டம்

### மன்னிப்புச் சபை கண்டனம்

(லண்டன்)

சிறிலங்காவில் நூற்றுக் கணக்கான மக்கள் சட்டத்துக்குப் புறம்பான முறையில் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்படுகிறார்கள் என்று லண்டனிலுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று வெளியிட்டஅதன்அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எந்தவித விசாரணையும் இன்றி மக்கள் படுகொலை செய்யப்படுவதோடு, திடீரெனக் காணாமற் போகின்றனர் எனவும், இராணுவத்தினால் மக்கள் படுகொலை செய்யப்படும்போது, அதனை விசாரிக்க சட்டத்தைத் திருத்தும் நடவடிக்கைகளுக்கு அரசு இணங்க மறுக்கிறது. இராணுவம் படுகொலையில் ஈடுபடும் போது, அதனை விசாரிக்க இயலாதவாறு அரச பாதுகாப்பு வழங்கப்படுகிறது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

**A / L இரசாயனம்**

94, பொது இரசாயனம் ஆரம்பம் 11 - 07 - 1992 சனி 6. 30 AM ஆசிரியர் சத்தீஸ் 93 - பௌதிக இரசாயனம் ஆரம்பம் 18 - 07 - 1992 சனி 5Pm. 108, பிறவுண்றோட் யாழ்ப்பாணம். (2784)

## மேலதிக கொடுப்பனவு

தபால் ஊழியர்களுக்கு யூலை மாதம் முதல் சனிக்கிழமை வேலைக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு ஒரு நாள் சம்பளத்திற்கு சமமான தாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஹாட்லிக் கல்லூரி முதலாமிடம்

யாழ். றோட்டறிக் கழகம் யாழ். கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் உயர்வகுப்பு மாணவர்ககளுக்கிடையே நடாத்திய பொது அறிவுப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அணி முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்டது.

இப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய ஹாட்லிக் கல்லூரி அணியில் செல்வன்களான தி. இராஜ்குமார், இ. சுதாகரன், தி. அரவிந்தன், செ. வைகுந்தன், இ. ஸ்கந்தன் ஆகியோர் அங்கம் வகித்தனர். வெற்றிபெற்ற இவ் அணியினர் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர். (25)

## எயிட்ஸ் நோயாளர்

இலங்கையில் 59 எயிட்ஸ் நோயாளர்கள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கபடட்டுள்ளது.

இவர்களில் 55 பேர் வெளிநாடு சென்று தொழில் புரிந்து விட்டு இலங்கை திரும்பியவர்கள் என்றும், தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்துகட்டுநாயக்கா விமான நிலையத்தில் எயிட்ஸ் பரிசோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ள தாக சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கம்யூனிஸ்ட் கட்சிமீது கண்டனம்

(கொழும்பு)

''தற்போது நாட்டை ஆட்சி செய்யும் அரசு தமிழ் மக்களின் தேசிய உரிமைக்கு அரசியல் தீர்வு வழங்காமல் இருப்பதையும் பத்திரிகைச் சுதந்திரம், இலவசக்கல்வி, மக்களின் ஜனநாயக உரிமை ஆகியவற்றை பறிப்பதனையும் வன்மையாக எதிர்க்கிறோம்''

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் 49-வது ஆண்டு பூர்த்தியாவதையொட்டி கம்யூனிஸ்ட் கட்சியின் மார்க்ஸிஸ பிரிவு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## விகாரையில் போதைவஸ்து மீட்பு

(சிலாபம்)

சிலாபம், முங்கந்தலுவ விகாரையிலிருந்து ஐந்நூறு கிராம் ஹெரோயின் போதைவஸ்தைப் பொலிசார் மீட்டுள்ளனர்.

இரகசிய தகவல் ஒன்றினை அடுத்தே விகாரையில் தேடுதல் நடத்தப்பட்டதுஎன்றும், விகாரையில் போதைவஸ்து கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து விகாரைப் பிக்குவும் வேறொருவரும் தலைமறைவாகியுள்ளனர் என்றும்பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இந்த விகாரையில் இதற்கு முன்னரும் நான்கு கிலோ ஹெரோயின் போதைவஸ்து கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நினைவு கூருகின்றோம்...

## 1992-07-10

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வல்வெட்டித்துறை பொலிகண்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினடருனான மோதலில் வீரச்சாவெய்திய -

**வேந்தன் / கிருபா** [தில்லையம்பலம் கிருபைராசா மீனாட்சி அம்மன் கோயிலடி, வல்வெட்டித்துறை.[

மட்டக்களப்பு ' பழுகாமம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

திருக்கோணமலை ' கும்புறுப்பிட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 7 வயதுச்சிறுவன் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 தமிழர்கள்.

துன்னாலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கிரான் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**சுனில் / சுரேஷ்** (பொன்னுத்துரை புஸ்ப்பன் - மாமாங்கம், கிரான், மட்டக்களப்பு.)

1989 ஆம் ஆண்டு பருத்தித்துறை வியாபாரிமூலைப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 6 வயதுச் சிறுவன் உட்பட 6 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் (வல்வெட்டித்துறை) சிறிலங்கா கடற்படைக் கப்பல் மீது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய - கடற்கரும்புலிகள் -

**கப்டன் கொலின்ஸ்** (பர்னாந்து சில்வெஸ்டர் - நறுவிலிக்குளம், மன்னார்.)

**மேஜர் காந்தரூபன்** (யோகராசா கோணேஸ்வரன் குஞ்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.)

**கப்டன் வினோத்** (வேலுப்பிள்ளை திலகராசா - திலகராசா வீதி, காட்டு வளவு, வல்வெட்டித்துறை.)

முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் சிறிலங்காப் படையினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**மருது** (இராசேந்திரம் சாந்தகுமார் - 7-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.)

மயிலிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**சீனிவாசன்** (செல்வராசா உமையாளன் - ஐயனார் கோயிலடி, சுன்னாகம்.)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தை உட்பட 2 தமிழர்கள் - சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டும், எரித்தும் கொல்லப்பட்ட சிறுமி பெண் ஆகிய 2 தமிழர்கள் - கல்முனைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மற்றும் ஜிகாத் குழுவினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 31 தமிழர்கள்.

முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட இளம்பெண்.

1991 ஆம் ஆண்டு அம்பாறை றவேக்குளம் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**ரூபன்** (அம்பாறை)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆகாய - கடல் - வெளி நடவடிக்கையில் சுற்றுலா விடுதி முகாம் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் பரன்** (சிங்காரம் அன்பழகன் - வன்னி விளாங்குளம், மாங்குளம், முல்லைத்தீவு.)

**கப்டன் மதிவண்ணன்** (சாமுவேல் புஸ்பராஜ்- கிறிஸ்தவக்குளம், செட்டிக்குளம், வவுனியா.)

**கப்டன் உதயகுமார்** (ஆறுமுகம் தனபாலசிங்கம்- 3-ம் கட்டை, சோலையடி, திருக்கோணமலை.)

**லெப். காந்தன்** (சிவசுப்பிரமணியம் சிவகணேஸ் - நெடுங்குளம், வவுனியா.)

**லெப். சித்திக்** (தவானந்தவேல் விக்னேஸ்வரன் - தெணியம்பை, வல்வெட்டித்துறை, யாழ்.)

**லெப் சியால் / சியாஸ்** (கிங்ஸ்லி யோசப் இராஜரத்தினம் - 25, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.)

**லெப். நில்மஸ்** (கனகரத்தினம் வதீஸ்வரன் - சங்கத்தானை, சாவகச்சேரி, யாழ்.)

**லெப்- பிந்துரன்** (அன்ரனி லோகு ஜெராட் -7-ம் வட்டாரம், பேசாலை, மன்னார்.)

**லெப். புண்ணியமூர்த்தி** (சின்னத்தம்பி சிவகுமார் - இன்ஸ்பெக்டர் ஏத்தம், பொத்துவில்-3 அம்பாறை.)

**லெப். கௌசலன்** (சக்திவேல் நாகேஸ்வரன் - செக்கட்டிப்புலவு, வவுனியா.)

**2-ம் லெப். சுதன்** (செபமாலை யேசுதாஸ் -பாலரிப்புக்குளம், மன்னார்.)

**செந்தில்** (பாலசுந்தரம் செல்வகுமார் - நாவலர் பண்ணை, மருதோடை, நெடுங்கேணி, மணலாறு.)

**காந்தன்** (கணபதிப்பிள்ளை பத்மராஜா - ஐயங்கேணி, ஏறாவூர், மட்டக்களப்பு.)

**திலகன்** (திருச்செல்வன் கிங்ஸ்லி ஆம்ஸ்ரோங் கஜேந்திரன் - 13, புதிய குடியிருப்பு, பாஷையூர், யாழ்.)

**குமார்** (லட்சுமணன் ராஜா - கித்துல், மட்டக்களப்பு.)

**தீபன்** (சாமித்தம்பி தங்கேஸ்வரன் - கள்ளியந்தீவு, திருக்கோயில், அம்பாறை.)

**நியூட்டன்** (குமாரசாமி சிவகுமார் - நாவற்குழி, கைதடி, யாழ்)

**மாயவன்** (சங்கரப்பிள்ளை கனகசிங்கம் - பாலாவி தெற்கு, கொடிகாமம் யாழ்.)

**விக்கி** (தங்கராசா விக்கினேஸ்வரன் - மல்வத்தை, அம்பாறை)

**சத்தியன்** (மனோகரசர்மா பாலரூபசர்மா - துன்னாலை வடக்கு, கரவெட்டி யாழ்.)

**லோ** (சின்னத்தம்பி அமிர்தலிங்கம் - ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு)

**லெப்.வாகினி** (தேவராணி கந்தசாமி சுங்கன்கேணி வாழைச்சேனை, மட்டக்களப்பு)

**2-ம். லெப் கலிஸ்ரா** (செந்தமிழ்ச்செல்வி சதாசிவம் - பழம்பாசி, நெடுங்கேணி, மணலாறு)

**2–ம் லெப். தபேசா** (மஞ்சுளா சுப்பையா - கொண்டலடி ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்)

**2-ம் லெப். அமராவதி** (நகுலேஸ்வரி (நளா) பாலசிங்கம் - 2-ம் வட்டாரம், இரணைக்கேணி, குச்சவெளி, திருக்கோணமலை)

**றிசனா** (ஈஸ்வரிதங்கராசா - வி.கி ஒழுங்கை, கிண்ணியா, ஆலங்கேணி, திருக்கோணமலை)

**சகாரா** (மகேஸ்வரி பொன்னுச்சாமி - பிரதான வீதி கிரான், மட்டக்களப்பு)

**பகிர்தா** (சிவநந்தினி சின்னத்தம்பி - அண்ணமார் கோயிலடி, ஏழாலை, யாழ்)

**யமுனா** (சீதாலட்சுமி தியாகராஜா - சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா)

**விதுபாலா** (ஜெயராணி துரையசிங்கம் - தண்டுதான் மாமடுச்சந்தி, நெடுங்கேணி, மணலாறு)

**லோகா** (கோமதி சக்திவேல் -இதயநகர், கிளிநொச்சி)

**ரூபிகா** (கெலன் டயானி அலோசியஸ் - செபஸ்தியார் கோயிலடி, மன்னார்)

இதே நடவடிக்கையில், உப்பளமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**மாணிக்கதாஸ்** (இராசு நாகேந்திரன் - தச்சன்குளம், வவுனியா.)

வவுனியா செட்டிக்குளம் டகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**2ஆம் லெப். ரஜனி** நாராயணன் மகாலிங்கம் - கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4674)

தேர்தல் ஆணையாளர் அறிக்கை

## பரிசீலனை செய்ய பாராளு. தெரிவுக்குழு

### பிரேரணை கொண்டுவர அனுமதி

பெப்ரவரி 15, 1989 இல் நடைபெற்ற தேர்தல் பற்றி தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக பரிசீலனை செய்வதற்கென பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்கக்கோரும் பிரேரணைக்கு அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இந்த முன்னறிவித்தல் இடம்பெற்றிருப்பதை தொடர்ந்து இந்த வாரத்தில் மேற்படி பிரேரணை பாராளுமன்றத்திற்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| ஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 26 | 10 |
| — | — |
| 09 | 07 |
| — | — |
| 1974 | 1991 |

### 2 ஆம் லெப். அமராவதி

(பாலசிங்கம் நளா)

[ஆனையிறவு சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்]

சந்தர்ப்பம் பார்த்து நின்று
சமருக்கு சென்ற வேளையிலே
சரித்திரம் ஆனவள் நீ
உனது இலட்சியப் பணிதொடர
ஆயிரமாயிரமாய் வேங்கைகள் - உன்
பின்னால் அணிவகுத்து நிற்கின்றனர்.

1025, மானிப்பாய் வீதி.
யாழ்ப்பாணம்.

திருமலைத்தொடர்பகம்

(சி/4641)




**1987** இல் இந்திய இராணுவம் எம் மண்ணில் காலடி வைத்த வேளையில், புலிகளைச் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டு இருந்தனர். புலிகளோடு மக்களை இனம் காண முடியாத இராணுவத்தினர் மக்களை வயது வேறுபாடு இன்றி கொன்று குவிக்கும் பணியில் வீடு வீடாகச் சோதனையில் ஈடுபடுகின்றனர்.

இந்திய இராணுவத்தின் முற்றுகைக்குட்பட்ட ஒரு பிரதேசமான தெல்லிப்பளைப் பகுதியில் இருந்து மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறிக் கொண்டு இருக்கின்றனர். ஆனால் 13 வயது நிரம்பியவளான தர்சினி என்ற இளம்பெண் தனது பெற்றோருடன் அப்பகுதியிலேயே இருந்தாள்.

விடுதலைப் போரிலே ஊறிய உள்ளங்கள் உயிர்த்துடிப்புடன் போராடிக் கொண்டு இருக்கும் எமது சொந்த மண்ணில் ''வாழ்வது என்றால் சுதந்திரமாக வாழ வேண்டும். இல்லையேல் சாக வேண்டும்'' என்ற சிந்தனையே ஊறிஇருக்கின்றது.

ஒருமுறை சுற்றிவளைப்பில் ஈடுபட்ட இந்திய இராணுவம் தர்சினியின் சகோதரனைப் ''பயங்கரவாதி'' என்ற முத்திரையுடன் கைது செய்து காங்கேசன்துறை தடுப்பு முகாமில் வைத்து மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதை செய்தது. சகோதரனைப் பார்க்கவென தாயுடன் தர்சினியும் சென்றாள். தமையனின் உடலில் சித்திரவதையின் தடயங்களைக் கண்ட தர்சினியின் கண்கள் கலங்குகின்றன. தமையனிடம் ''அண்ணா இவங்களை நான் துவக்கு எடுத்துச் சுடாமல் விடமாட்டேன்'' என்று உறுதியுடன் கூறுகிறாள். சகோதரனின் கண்களும் கலங்குகின்றன.

இரு உடன்பிறப்புக்களுடன் கடைசிப் பிள்ளையாக பிறந்த தர்சினி மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டாள். கடுமையான போராட்ட சூழலில் வளர்ந்ததால் இவளது இயல்பு வித்தியாசமானதாக இருந்தது. அச்சமின்றி துணிவுடன் வாதாடும் திறனும், கல்வியிலும், கலைகளிலும் ஆர்வத்துடன் கற்கும் திறமையும், வீட்டிற்கு வருவோரை உபசரிக்கும் நற்பண்பும் உடையவளாக இருந்தாள்.

தர்சினியின் வீட்டிற்குப் போராளிகளும், ஆதரவாளர்களும் வருவதை அறிந்த இந்தியப் படையினர் **E. P R L F** இன் உதவியுடன் சுற்றிவளைத்தபோது ஆதரவாளரான நிர்மலன் என்ற தமையனின் நண்பனை இவளின் வீட்டில் வைத்து இவளிற்கு முன்னாலேயே சுட்டுக்கொன்றனர். தர்சினியின் ஒன்றுவிட்ட சகோதரனுடன் தானும் ஒரு சகோதரனைப் போலவே பாசமுடன் பழகி போராட்ட உணர்வினைத் தர்சினிக்கு உணர்த்தியதில் இவனுக்கும் பங்குண்டு. இராணுவத்தினர் சுட்டபோது நேரே கண்டதில் அது தர்சினியின் இதயத்தில் ஆழமாகப் பதிந்தது. இந்தச் சம்பவங்கள் பிஞ்சு உள்ளத்தில் தானும் போராடப் போக வேண்டும் என்ற எண்ணத்தை மேலும் உறுதி பெறச் செய்தது.

இந்திய இராணுவத்தின் கொடுமைகள் முடிவடைந்ததும் மீண்டும் சிறிலங்காப் படையினரின் அனர்த்தங்கள் ஆரம்பித்தன. புலிகளுடன் நேருக்கு நேர் சண்டைபோட முடியாத சிங்களப் படையினர் குண்டுவீச்சு விமானங்கள் மூலம் தாக்குதலைத் தீவிரப் படுத்தியது. புலிகளை அழிப்பதாகக் கூறிய இலங்கை அரசு குடிமனைகள் மீதும், பாடசாலைகள், வைத்திய சாலைகள், ஆலயங்கள் போன்றவற்றின் மீது தாக்குதலை நடத்தியது.

இந்த வேளையில் தர்சினி வீட்டிலிருந்து குண்டுவீச்சு மத்தியிலும் காங்கேசன்துறைப் பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த போராளிகளிற்கு தினமும் உணவு தயாரித்துச் சென்று கொடுத்துவிட்டு வருவாள். ஒருமுறை உணவுடன் சென்ற தர்சினி திரும்பி வீட்டிற்கு வரவில்லை. தந்தையார் போராளிகளின் முகாமிற்குத் தேடிச் சென்றபோது வர மறுத்து விட்டாள். ஆனால் போராளிகள் இவளைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

போராட்ட உணர்வு இதயத்தில் வலுக் கொண்ட இவள் வீட்டில் தந்தையுடனும், சகோதரனுடனும் தான் இயக்கத்திற்குப் போகப் போகிறேன் என்று வாதாடுவாள்.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் தாக்குதல்கள் வான், தரை, கடல் வழியாக ஆரம்பித்தன. யாழ். கோட்டையில் மும்மரமாக சண்டை நடந்து கொண்டிருந்தது. புலிகள் சளைக்காது வீரத்துடன் முன்னேறிக் கொண்டு இருந்தார்கள். நாளுக்கு நாள் மக்களின் உடைமைகளும் உயிர்களும் ஸ்ரீலங்கா படையின் குண்டு வீச்சுக்களால் அழிக்கப்பட்டுக் கொண்டு இருந்தது. வீட்டிலிருந்த தர்சினி தினமும் பத்திரிகைகளைவாசிக்கும்பொழுதும் செய்திகளை கேட்கும் பொழுதும் போராடப் போக வேண்டும் என்ற உணர்வு புயலடிக்கத் தொடங்கியது.

தர்சினி 1990-08-15 அன்று விடுதலையை நோக்கியபாதையில் காலடி வைத்தாள். வயதிலே சிறியவளாகிய தர்சினி விடுதலைப் பாதையில் இணையும்போது தந்தைக்கு ''நாட்டு நிலைமையை யோசியுங்கள்'' என்று எழுதிய கடிதத்தை இங்கு முழுமையாகப் பிரசுரிக்கின்றோம்.

அப்பா,

நான் இயக்கத்திற்கு போக ஆசை கொண்டுள்ளேன். இந் ஆசையை நிறைவேற்ற உங்கள் ஒத்தாசை வேண்டும். இதைப் பற்றி நீங்கள் தப்பாக நினைக்க வேண்டாம். பேனா ஏந்திய கைகள் இன்று துப்பாக்கி ஏந்துகின்றன என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் நீங்கள் அன்று படிப்பை விட்டு விட்டு ஆமி வேலையில் சேர்ந்தீர்கள். இப்போது உங்களுக்கு புரிகிறது. முதலில் நாட்டு நிலைமையை யோசியுங்கள் இன்று சிங்களவர்கள் கூட ஒருசிறுவன் தனது மதிய உணவு நிதியை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒதுக்குகிறான். நடக்க எடுக்க முடியாத கிழவர்கள் கூட ஆயுதம் ஏந்திய வண்ணம் நிற்கின்றார்கள். அவர்கள் அன்று 66.72,83,87 இவ்வாறு ஆண்டாண்டு காலமாக எம்மை அழித்து எமது மண்ணை ஆட்சி செய்ய முனைகிறார்கள். ஏன் நாம் அப்படி முனையக் கூடாது? ''அண்ணன் காட்டிய வழியில் தம்பி செல்கிறான் அது போல அக்காள் காட்டிய வழியில் நானும் போகிறேன்'' வீணாகத் தேடி அலைய வேண்டாம். தமிழீழம் கிடைக்கும்வரை போராடியே தீருவோம்.

எத்தனை எத்தனை
கொடுமைகள் இங்கே
இனியும் இருப்பது மடமை
என்றே
இன்றே குதிப்போம்போர்க்
களத்தில்
அடிமை வாழ்வு எத்தனை
காலம்
விடிவு காண புறப்படுவோம்
புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்.

தி. தர்சினி.

தனது கல்வியை இடையில் நிறுத்தி விட்டு சுதந்திர மண்ணில்தான் கல்வியை தொடர முடியும். அதற்குள் விடியலின் பாதையிலே புரட்சிக்கல்வியை தொடரப் போவதாக தந்தையின் சேட்டினுள் கடிதத்தை வைத்துவிட்டு அக்காவின் வழியை பின்பற்றி விடியலைக் காணப் புறப்பட்டாள்.

பயிற்சி முகாமிற்கு அனுப்பப்பட்டாள் தர்சினி. அங்கு கீதா என்ற பெயருடன் பயிற்சியினை பெற்றாள். தனக்கு பயிற்சியின் போது வழங்கப்



கீதா

பட்ட பணிகளை மிகவும் சுறுசுறுப்புடன் செய்து முடிப்பாள். அமைதியான தோற்றத்தைக் கொண்டிருந்தாலும் விழிகளில் வீரத்தின் உறுதியையும், விடுதலையுணர்வையும் நிதானமாக சிந்தித்து திட்டங்களை வகுப்பதிலும் கீதா திறமையாக செயற்பட்டாள். பயிற்சிகளை விரைவாகவும் உற்சாகமாகவும் செய்து முடிப்பாள். தனக்கு பொறுப்பாளராக உள்ளவர்களின் கட்டளைகளை ஏற்று அதன்படி நடப்பாள்.

எல்லா போராளிகளுடனும் அன்பாக பழகுவாள். இவளது உயிர் நண்பியாக தவச்செல்வி என்ற போராளி இருந்தாள். இருவரும் ஒரே பயிற்சி முகாமிலே பயிற்சி எடுத்தவர்கள். எந்த விடயத்திலும் ஒற்றுமையாகவும் போட்டியாகவும் செயல்படுவார்கள். இருவருக்கும் இடையில் பொறாமை என்பது கிடையாது. பயிற்சியின் போது விளையாட்டுப் போட்டிகள் எல்லா குழுக்களிற்கு இடையிலும் இடம் பெற்றது. அப்போது இருவருக்கும் இடையில் கடும் போட்டி. ஆனாலும் கீதாவே முதலிடங்களைப் பெற்றாள்.

கலை நிகழ்ச்சிகளில் ஆர்வமுடைய கீதா பயிற்சியின் ஓய்வுநாட்களில் நிகழ்ச்சிஇடம் பெறும் போது தனது கவித்திறனையும். பாடல்களையும் இனிமையாக வெளிப்படுத்துவாள்.

பயிற்சி முடிவடைந்ததும் இவள் 15 பேர் கொண்ட குழுவிற்கு பொறுப்பாளராக தெரிவு செய்யப்பட்டாள்.வயதில் சிறியவளாக இருந்தாலும் தனக்குரிய வேலைகளை பொறுப்புடன் ஏற்று பிள்ளைகளுக்கு எந்த நேரம் என்ன வேண்டுமோ அதனை கேட்டு நிறைவேற்றுவாள். அறிவுரைகள் கூறி நல்வழிப்படுத்துவாள்.

இவர்களது பயிற்சி முடிந்த நேரத்தில் காரைநகர் பகுதியில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா படையினருடன் மோதல்கள் ஆரம்பமாகின. இந்த மோதலின் போது மகளிர் படைப்பிரிவும் பங்கு கொண்ட போது கீதாவும் கலந்து கொண்டாள்.

பின்னர் விசேட பயிற்சிக்கென அழைக்கப்பட்டு பயிற்சி முகாமிற்கு சென்றபோது இவளைப் பார்க்கவென முதல் தடவையாகப் பெற்றோரும் சகோதரனும் வந்தார்கள். ஆனால் கீதாவோ 'தன்னைப் போலவே வெளி மாவட்டத்தைச் சேர்ந்த பல போராளிகள் பெற்றோரைக் காணாது இருக்கிறார்கள். நானும்அவர்களைப் போல ஒரு போராளி. நான் மட்டும் பாத்துக்கதைக்க மற்றப் பிள்ளைகளுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே. அவர்களுக்கும் பாசம் இருக்கும் தானே'' என்ற நினைப்புடன் பாசத்தின் பிணைப்பு அழுத்தினாலும் பெற்றோரைச் சந்திக்க மறுத்துவிட்டாள் கீதாவைப் பார்க்காமலே பெற்றோர் வீடு திரும்பினார்கள்.

எமது இயக்கத்தில் இருக்கும்இவளுடையஅக்காவையும் தான் ஒருமுறையும் இயக்கத்தில் சேர்ந்தபின் பார்க்கவில்லை எனகூறுவாள்.

மீண்டும் போர் ஆரம்பமாகியது. மன்னாரில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா அரச படையின் கெடுபிடிகள் அதிகரிக்க மக்கள் அகதிகளாக வேண்டிய நிலை ஏற்பட்டது உடைமைகள் உயிர்கள் அழிக்கப்பட்டதுடன் பெண்கள் கோரமான முறையில் பாலியல் வன்முறைகளிற்கு உள்ளாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டனர். அத்துடன் புலிகளின் காவல் அரண்களை கைப்பற்றப் போகிறோம் என்று கூறி முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து புலிகள் பாரிய தாக்குதலை நடத்தத் தொடங்கினர்.

*17-06-91* அன்று மன்னாரில் நடைபெற்றுக் கொண்டிருந்த தாக்குதலில் பங்கு கொள்ள மகளிர் படையணியினரும் செல்வதற்கு தயாராகினார்கள். வாகனத்தில் ஒவ்வொரு குழுவும் ஏற்றப் பட்டது. கீதாவும் தோழியரும் வாகனத்தில் ஏறியதும் 'எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்' என்று பாடத் தொடங்கினர் வாகனம் எதிரியின் மறைவிடத்தை நோக்கி விரையத் தொடங்கியது. சிறிது தூரம் சென்றதும் யார் இந்த சண்டையில் முதலில் சாகிறது என்ற பேச்சு எழுந்தது. அப்போது கீதா நான் தான் முதலில் சாவேன் என்று கூறினாள். நான்தான் முதலில் சாவேன்என்று மகிழ்ச்சியுடன் கூறியதைக் கேட்டு மௌனமாகின்றனர்.

வவுனியாபகுதியில் சண்டை மிகவும் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றது. சிறிலங்கா படையின் குண்டு வீச்சு விமானங்களின் கண்மூடித்தனமானதாக்குதலின் மத்தியில் புலிகள் இராணுவத்தினரை முன்னேற விடாதுபதில் தாக்குதலை நடத்தியபடி முன்னேறிச் செல்கின்றனர்.

இந்த வேளையில் கீதாவின் அணியினர் வந்தவாகனம் வவுனியா குருக்கஸூர் பகுதியை அடைந்ததும் பழுதடைந்து விட்டது. அவர்கள் வாகனத்தை விட்டிறங்கி கால்நடையாக சண்டை நடக்கும் இடத்தை நோக்கிவிரைகின்றனர்.

அப்போது இரண்டு குண்டு

(6ம் பக்கம் பார்க்க)

## மாவீரர்களுக்கு அஞ்சலி

ஆனையிறவு முகாமதை
அடியோடு அழித்து விட
இணையிலாப் புலிவீரர்கள்
அணிவகுத்து போர் தொடுத்தார்
துணைப்படையும் துணை நிற்க
துணிவோடு சென்ற தங்கே
மாணவர்கள், சாரணர்கள், மக்களெலாம்
மகிழ்வோடு உதவிநின்றார்.

தொண்ணூற்றி ஒராம் ஆண்டு
தொடுத்த அந்தப் போரினிலே
ஐநூற்றுக்கும் அதிகமான வீரரை
உரமாக பெற்றதிப் பூமி
துணைப்படையும் ஐந்தாறு வீரரை
துறந்துதான் விட்டது
அத்தனை வீரர்கட்கும் ஓராண்டு
அஞ்சலிகள் உரித்தாகட்டும்.

பாராட்டை விரும்பவில்லை - அவர்
பாராள எண்ணவில்லை
பூராடம் பேசி அவர் வீண்
பொழுது போக்கவில்லை
சீராக போர் புரிந்தார்
சீராக்க போய் முடிந்தார்
தாராளமாக வந்து அவர்
தமதுயிரை தந்து நின்றார்.

இனியதோர் சுதந்திரத்தை
இரட்சிக்க, வீரர் அவர்
தணியாத தாகமதாம்
தமிழீழ தாயகத்தை
தரணியிலே உருவாக்கி
தருவதற்காய் போய் முடிந்தார்
பரணிகளை பாடிடுவோம் - அவர்
பணியை தொடர்ந்திடுவோம்.

கண்களை குளமாக்கி
கண்ணீரை வடிக்கும்
பண்ணான தமிழினமே
காணுக அவர்கள் வீரம்
பூணுக போர்க் கோலத்தை
வீணர்கள் எதிரிகளாம் — நாம்
விரட்டித்தான் ஓய்ந்திடுவோம்.

—ஆனந்தன்—

# வை- 8 விமானத்தின் வீழ்ச்சி விமானப்படைக்குப் பேரிழப்பு

சிறிலங்கா விமானப்படை தனது வரலாற்றில் மிக மோசமான பெரிய இழப்பை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்தது. விமானப்படைக்குச் சொந்தமான வை-8 விமானத்தை விடுதலைப் புலிகள் சுட்டுவீழ்த்தியதன் மூலம் இப் பாரிய இழப்பு ஏற்பட்டது.

இவ்விமானம் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடிய வகையில் மாற்றியமைக்கப்பட்டிருந்தது. துருப்புக்களை இடம்மாற்றவும், சிறிய ரக வண்டிகளை ஏற்றிச்செல்லவும், இராணுவ உபகரணங்கள், வெடிப் பொருள், உணவுப் பொருள்கள் என்பன

பாரிய பின்னடைவை ஏற்படுத்துவதாக இந்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டமை அமைந்துள்ளது. இதன் மூலம் சிறிலங்கா விமானப்படை பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

மேலும், இந்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டமை தனி



சிறிலங்கா விமானப்படையிடம் இருந்த மிகப் பெரிய ரக விமானம் இதுவாகும். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் இந்த வை-8 ரகத்தைச் சேர்ந்த இரண்டு விமானங்களை சீனாவிடம் இருந்து சிறிலங்கா கொள்வனவு செய்தது. இதனில் ஒன்று இயந்திரக் கோளாறினால் இயங்க முடியாத நிலையில் உள்ளது. மற்றையது, சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளது.

வற்றை ஏற்றிச் செல்லவும் பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக அவசரத் தேவைக்கான பொருள்களையும், காயமடைந்த இராணுவத்தினரை கொழும்பு கொண்டு செல்வதிலும் இதன் பங்கு பணி முக்கியமானதாக இருந்தது.

இந்த வருட ஆரம்பத்தில், சீனன் குடா விமானப்படைத் தளத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பின் பின்னர், சிறிலங்கா விமானப்படைக்கு

யாக விமானம் ஒன்றின் இழப்பாக மட்டும் கொள்ள முடியாது. சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த பல உயர் அதிகாரிகளும் கொல்லப்பட்டுள்ளனர். இந்த விபத்தில் கொல்லப்பட்ட ஸ்குவார்டன் லீடர் காசீர் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகிய உயர் விமானப்படை அதிகாரியாவர்.

ஆனால், இந்த விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதை சிறிலங்கா இராணுவத்தரப்பு ஒப்புக்கொள்ள மறுக்கின்றது. இதனால் முரண்பாடான பல்வேறு, அறிக்கைகளையும் வெளியிட்டு வருகின்றது. ஆனால், சிறிலங்கா இராணுவ அரச அதிகாரிகள் வெளியிடும் முரண்பாடான அறிக்கைகளே விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது என்பதை புரிந்து கொள்ளப்போதுமானதாகும்.

இதேவேளை, விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்பதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் சில அறிக்கைகள் வெளிவந்துள்ளன. "இலக்கற்ற வகையில் வந்த ஒரு சூடு ஒன்று கூட விமானத்தை துளைத்திருக்கக்கூடும். வெடிமருந்து மற்றும் ஆயுதங்கள் காணப்பட்ட விமானம் ஒரு அசல் 'டைம் பாம்' தான்" என சிறிலங்கா விமானப் படையின் முன்னாள் தளபதி ஏயர்வைஸ் மார்ஷல் ஹரிகுணதிலகா கூறியுள்ளமை யதார்த்த நிலையை அவர் சிந்திக்க முற்படுவதையே காட்டியுள்ளது.

மேலும், "நடு வானிலேயே விமானம் வெடித்து நிலத்தில் வீழ்ந்ததென எனக்கு தகவல் கிடைத்துள்ளது. ஆனால், உத்தியோக பூர்வமாக இராணுவம் இதை ஒப்புக்கொள்ளுமென நான் நினைக்கவில்லை" என சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததில் இருந்தே, இந்தவிமானம் தொடர்பாக இராணுவ வட்டாரங்களின் நிலைப்பாட்டைப்புரிந்து கொள்ளலாம்.

வீம்புக்குத்தானும், புலிகளால் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதை இராணுவம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், விமானத்தை இழந்தது பேரிழப்பு என்பதை இராணுவம் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்.

## வை-8 விமானம்

ரசிய விமானமாகிய AN - 12B இராணுவ குடியியல் போக்குவரத்து விமானத்தினைச் சீனாவில் தயாரிக்கும் போது. Y-8 விமானம் எனப்பெயரிட்டு அழைக்கப்படுகிறது. இது நான்கு டேர்போ புறப்பலறைக் கொண்டிருக்கும் இதனை இயக்குவதற்கு 5பேர்தேவைப்படுவர். Y-8 விமானத்தையே எமது மக்கள் சகடை என அழைக்கின்றார்கள். இந்த விமானத்தில் 96 துருப்புக்களை ஏற்றிச்செல்லலாம்.

முழு நீளம் - 111 அடி 7 அங். (34.25 மீற்றர்)
முழுஉயரம் - 36 அடி 7 அங். (11.16 மீற்றர்)
செட்டையின் முழுநீளம் - 124 அடி 8 அங். (38மீற்)
22965 அடி (7000 மீற்றர்) உயரத்தில்
அதிகூடிய வேகம் - மணித்தியாலயத்திற்கு 411 மைல்.
26250 அடி (8000 மீற்றர்) உயரத்தில்
அதிகூடிய சீரான வேகம்-மணித்தியாலத்திற்கு 342மைல் (550 கிலோ மீற்றர்)
சிக்கனமான சீரான வேகம்- மணித்தியாலத்திற்கு 329 மைல் (530 கிலோ மீற்றர்)
எரிபொருள் தாங்கியின் அளவு மொத்தம் - 30 177 லீற்றர்

# இரத்த அழுத்தம்
## காரணிகள்; ஆபத்துக்கள்

மனிதனுடைய ஆரோக்கியமான உயிர்வாழ்க்கைக்கு தொடர்ச்சியான இருதயத் துடிப்பும், இரத்தோட்டமும் மிக அடிப்படையான அம்சமாகும். இருதயத்துடிப்பு என்பதே, உடல் முழுவதும் இரத்தத்தை சுழற்சியாக செலுத்துவதற்காக 'பம்பு' போன்று தொழிற்படுவதேயாகும். ஒவ்வொரு முறையும் துடிக்கும் போது ஏறக்குறைய 140 மி. லீற்றர் இரத்தம் உடல் முழுவதற்கும், சுவாசப்பைகளுக்குமாக முறையே இடது வலது இதய அறைகளிலிருந்து வெளியேற்றப்படும். சுவாசப் பைகளில் சுவாசத்தின் மூலம் ஒக்ஸினேற்றப்பட்ட இரத்தம் இருதயத்தின் மூலம் உடல் முழுவதற்கும் விநியோகிக்கப்பட்டு மீண்டும் இருதயத்தை வந்தடையும். இவ்வாறாக, இருதயம், வயது வந்தவர்களில் ஒரு நிமிடத்திற்கு 72 முறையும், சுவாசம் 16 முறையும் செயற்படும்.

### இரத்த அழுத்தம்:

உடலின் சகல உறுப்புகளுக்கும், குறிப்பாக பிரதான உறுப்புகளான மூளை, இருதயம், சிறு நீரகங்கள் என்பவற்றுக்கு இருதயத்துடிப்பு மூலம் தொடர்ச்சியாக இரத்தம் ஒரு குறிப்பிட்ட இரத்த அழுத்தம் பேணப்படுவதாலேயே போதுமானளவு இரத்தம் விநியோகிக்கப்படுகிறது. வயது வந்த இளைஞர் யுவதிகளில் இது ஏறக்குறைய 120/80 (இரு குறியீடுகள்) ஆக இருக்கும். வயது கூடக்கூட படிப்படியாக இரத்த அழுத்தமும் அதிகரிக்கும். அதாவது இருபது வயதில் 120 80 ஆக இருந்த அளவு அறுபது வயது எட்டும்போது ஏறக்குறைய 140/90—95ஆக அதிகரித்திருக்கும். இது சாதாரணமான ஏற்றுக்கொள்ளப்பட்ட அதிகரிப்பாகும்.

### உயர் இரத்த அழுத்தம்

எனவே உயர் இரத்த அழுத்தத்திற்கான வரைவிலக்கணம் வயதுடன் நேரடியாக சம்பந்தப்பட்டது. அதாவது 20 வயதில் ஒருவருக்கு இரத்த அழுத்தம் 140 95 ஆக இருக்குமாயின் நிச்சயமாக உயர் இரத்த அழுத்தம் எனக்கருதப்படும். இதே அளவீடு 70 வயதான ஒருவருக்குக்காணப்படுமாயின் அது சாதரணமாகக் கருதப்படும் மேலும் இளமை வயதிலும் சிலருக்கு உயர் இரத்த அழுத்த வியாதி ஏற்படும் ஆபத்து இருந்தாலும், இவ்வியாதி பெரும்பாலும் வயது வந்தவர்களிலேயே ஏற்படுகின்றது.

### காரணிகள்

90-95 சதவீதமான 'உயர் இரத்த அழுத்த, வியாதிக்கு உண்மையான அடிப்படைக் காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. இதுசம்பந்தமான மருத்துவ ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன.

மிகுதி 5-10 சதவீதமான உயர் இரத்த அழுத்த வியாதிக்கு பல காரணங்கள் உண்டு (1)இது ஒரு பரம்பரைவியாதியாகும். அதாவது தாய் அல்லது தகப்பனுக்கு அல்லது இருவருக்கும் இவ்வியாதி ஏற்கனவே இருக்குமாயின் இவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு அவர்களுக்கு வயதாகும் போது இவ்வியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது. எனவே பரம்பரையில் உயர் இரத்த அழுத்த வியாதி உள்ளவர்கள் வயதாகும் போது தமது இரத்த அழுத்தத்தை குறைந்தது 3-6 மாதத்திற்கு ஒருமுறை வைத்தியப் பரிசோதனை மூலம் அளவெடுத்துக் கொள்ள வேண்டும்.

2) இரண்டாவதாக சிறுநீரகத்தொகுதியில் பிரச்சினைகள் ஏற்படுவதால் உயர் இரத்த அழுத்த வியாதி ஏற்படும் ஆபத்து அதிகரித்துக் காணப்படுகிறது அதாவது சிறுநீரகத் தொகுதியில் கிருமிகள் படிதல் சிறுநீரகத்தில் கற்கள்

**மாறன்**

உண்டாகுதல் சிறுநீரகத் தொகுதியில் பிறக்கும்போதே பிழைகள் இருத்தல் என்பவற்றால் இவ்வியாதி ஏற்படும்.

3) மூன்றாவதாக இரத்தக் குழாய்களில்அசாதாரணமான பிரச்சினைகள் பிழைகள் இருப்பதால் குறிப்பாக இருதயத்திலிருந்து புறப்படும் பிரதான இரத்தக்குழாயான அயோட்டா மற்றும் சிறுநீரகத்திற்கு குருதிவழங்கும் குழாய்களில் பிரச்சினை இருக்குமாயின் இவ்வியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது.

4)நான்காவதாகஉடலில்வேறு வியாதிகள் இருக்குமாயின் அதனாலும் அவற்றிற்குஅளிக்கப்படும் சிகிச்சை முறையினாலும் இவ்வியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது. உதாரணமாக டயபீற்றீஸ் வியாதி உள்ளவருக்கு பெரும்பாலும் இவ்வியாதி ஏற்படும் ஆபத்து அதிகரித்தே காணப்படுகிறது டயபிற்றீஸ் வியாதியும் சிறு இரத்தக்குழாய்களை படிப்படியாக பாதிப்பதால் இதன் மூலம் இவ்வியாதி ஏற்படுகிறது எனவேதான் டயபிற்றீஸ் வியாதி உள்ளவர்களும் தமது நிலைமையை ஒழுங்காக பரிசோதித்து தகுந்த சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

5) ஐந்தாவதாக வேறு வியாதிகளுக்காக உட்கொள்ளப்படும் மருந்துகளினாலும் இவ்வியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது குறிப்பாக பிரிட்னஸலோன் (Predinasolone) எனவேதான் இப்படியானமருந்ததுகளைமருத்துவரின் ஆலோசனையின்றியும் அனாவசியமாகவும் அதிகளவிலும் இம்மருந்துகளை உட்கொள்ளக்கூடாது.

6) உடலில் ஏற்படும் சில புற்றுநோய்களினாலும் அதிலிருந்து சுரக்கப்படும் மேலதிகமான ஹோமோன்களினாலும் இவ்வியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது அத்துடன் உடலில் ஹோமோன்களை சுரக்கும் உறுப்புகளான தைரோயிட் அட்ரீனல் என்பவற்றில் ஏற்படும் புற்றுநோய் அல்லது கட்டி வளர்தல் போன்ற வியாதிகள் ஏற்படும் போது உயர் அழுத்த வியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது.

7) மற்றும் மனதில் அடிக்கடி பயம் அமைதியின்மை போன்றவை ஏற்படும்போதும்இரத்த அழுத்தம் உயரும்.

8) கடைசியாக பெண்களுக்கு இன்னுமொரு ஆபத்துமுண்டு அதாவது தாய்மைப்பேறிலிருக்கும்போதும் இவ்வியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது அதுவும் குறிப்பாக பரம்பரையில்இவ்வியாதிஉள்ளபெண்கள் மேலும் 'டயபிற்றீஸ்' வியாதி உள்ளவர்களுக்கு, அவர்கள் தாய்மை நிலையடையும் போது இவ்வியாதி ஏற்படும் ஆபத்திருக்கிறது.

9. மேலும்உடல்நிறை பருமன் கூடியவர்கள் இருந்த இடத்திலிருந்தே முழுவேலையையும் செய்வார்கள், உடற்பயிற்சி உடலுழைப்பு குறைந்தவர்கள் சோம்பேறிகள் என்பவர்களுக்கும் இவ்வியாதி ஏற்படும் ஆபத்து அதிகரித்துக் காணப்படுகிறது.

### தடுப்பதற்கு சில வழிகள்

பரம்பரையில் இவ்வியாதி உள்ளவர்கள் முன்பு கூறிய வேறு வியாதி உள்ளவர்கள் கவலையீனமாக இராது உருப்படியான சிகிச்சை பெற்று தமது நோய்களை தீர்த்துக் கொள்ளவேண்டும். இதனால் பின்பு ஏற்படப்போகும் உயர் இரத்த அழுத்த வியாதியைத் தவிர்த்துக்கொள்ளலாம் உதாரணமாக டயபிற்றீசை கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ளவேண்டும் பிரிட்னஸலோன் போன்ற மருந்துகள் எடுப்பவர்கள் தம்பாட்டிற்கு எடுக்காமல் மருத்துவரின் ஆலோசனையை அவ்வப்போது பெற வேண்டும் கர்ப்பிணித்தாய்மார்களும். தமது இரத்தஅழுத்தம் சிறுநீர் என்பவற்றை மாதமொரு முறையாவது பரிசோதித்துக்கொள்ளவேண்டும்

### ஆபத்துக்கள் :

உயர் இரத்த அழுத்த வியாதியினால் திடீரென மாரடைப்பு, பாரிசவாதம், சிறுநீரக தொழிலிழப்பு, கண் பார்வை இழத்தல், தமது தொழில்களையோ, பயணங்களையோ தொடர முடியாமை போன்ற ஆபத்துக்கள் ஏற்படும்.

# சிசில் வைத்தியரட்ணாவின் வியூகம்

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இராணுவ உயர்பீடத்தில் செய்யப்பட்ட மாற்றங்களின்படி கூட்டுப்படைத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வனிகசேகராவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சிசில்வைத்தியரட்ணாவின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. இம்மாற்றங்களைப் பற்றி அவதானிகள் இருவிதமாக அபிப்பிராயப்பட்டனர். முன்னாள் பாதுகாப்பு மந்திரி ரஞ்சன்விஜேரட்ணாகொல்லப்பட்டதைத் தொடர்ந்து இராணுவத்தின் மீதான ஜனாதிபதி பிரேமதாஸாவின் பிடி தளர்ந்து விட்டது என்பதால் புதிய மாற்றங்களின் மூலம் தனக்குப் பொருத்தமானவர்களைப் பலப்படுத்தவும், தனக்கு உறுத்தலானவர்களைக் கட்சியிலிருந்து அகற்றவும் ஜனாதிபதி மேற்படி மாற்றங்களைச் செய்ததாக சில அவதானிகள் கூறினார்கள். வேறு சிலர் கூட்டுப்படைத் தலைமையகத்தின் போர்த் திட்டங்கள் எதிர்பார்த்த வெற்றியை எதிர்பார்த்த காலத்தினுள் பெறத் தவறியதனால் இராணுவத்திலுள்ள கடும்போக்காளர்களின் கை மேலோங்கியதையே மேற்படி மாற்றங்கள் உணர்த்துவதாக அபிப்பிராயப்பட்டார்கள்.

மாற்றங்களைத் தொடர்ந்து புதிய பொறுப்புக்களை ஏற்ற தளபதி சிசில் வைத்தியரட்ணா மூன்று மாத காலத்துள் கிழக்கில் சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வரப் போவதாகச் சூளுரைத்தார். இதற்குப் பதில் கூறிய ஹமில்டன் அவ்வாறு செய்து காட்டினால் தான் பதவியைத் துறந்து விடுகிறேன் என்றார். கிழக்கில் சிவில் நிர்வாகத்தைக் கொண்டு வருவது என்பதைச் சிசில் எந்த அர்த்தத்தில் கூறியிருப்பாரோ தெரியவில்லை. சிலசமயம் ஹமில்டனுடனான போட்டிக் காரணமாக அவர் அவ்வாறு கூறியிருக்கலாம் என்றும் அவதானிகள் அபிப்பிராயப்பட்டார்கள்.

திட்டமிடும், கட்டளையிடும் அதிகாரங்கள் சிசிலிடம் குவிந்த பின் வடக்குக் கிழக்கில் ரோந்து போகும் படையணிகள் தாக்கப்படுவதும், காவலரண்கள் தாக்கப்படுகையில் உண்டாகும் சேதங்களும் முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் ஓரளவிற்குக் குறைந்து விட்டதாக அவதானிகள் கூறுகிறார்கள். எனினும் கிழக்கில் புலிகளிற்கு எதிராகக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முழு அளவினதான இராணுவ நடவடிக்கைகள்எதுவும் இன்று வரை ஆரம்பிக்கப்படவில்லை. பதிலாகத் தனது முன்னைய தளபதிகளைப் போலவே சிசிலும் வடக்கையே தனது ஆற்றலை நிரூபிப்பதற்கான களமாகத் தெரிவு செய்திருக்கிறார். ஏன்? வடக்கில் பெறப்படும் எந்த ஒரு வெற்றியும் கிழக்கில் பெறப்படும் வெற்றிகளை விடப் பிரசார பலமும், பிரபல்யமும் உடையதாக இருக்கும் என்பதினாலா? அல்லது நீண்ட கால நோக்கிலான புதிய போர் வியூகங்களின் அடிப்படையிலா?

சில வாரங்களிற்கு முன்பு தளபதி சிசில் சொன்னார்: கிழக்கில் புலிகளைத் தோற்கடித்து விட்டால் புலிகளின் தமிழீழ இலட்சியத்தையும் தோற்கடித்து விடலாம் என்று அவ்வாறெனில் கிழக்கில் புலிகளை முறியடிக்கும் போரை ஆரம்பிக்காமல் அவர் ஏன் வடக்கை நோக்கித்திரும்பியுள்ளார்?

இந்த இடத்தில் தான் தளபதியின் புதிய வியூகம் குறித்துச் சிந்திக்க வேண்டியுள்ளது. தளபதி கிழக்கில் புலிகளை முறியடிப்பது என்பது வடக்கிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டியது என்று நம்புவது போல தெரிகிறது. ஏனெனில் வடக்கில் புலிகள் பலத்தோடு முறியடிக்கப்படாமல் இருக்கும் வரை கிழக்கில் அவர்களைப் பலவீனப்படுத்துவது சாத்தியமற்றது என்பது கடந்த ஒரு தசாப்தகாலத்திற்கும் மேலான போரின் அனுபவமாகும் கிழக்கில் தத்துக்கள் மிகுந்த கெரில்லா யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்புலிகளிற்கு வடக்கே விநியோகத் தளமாகவும் பின்தளமாகவும் இருப்பதாக ராணுவ உயர்பீடம் நம்புகிறது. கிழக்கில் காயமடையும் நோய்வாய்ப்படும் புலிகள் மருத்துவ வசதிகள் பெறவும் இளைப்பாறவும் கூடிய பின்தளமாக இருப்பதுடன் தேவைப்படும் போது

## நிலாந்தன்

படையணிகளையும் வெடிப்பொருட்களையும் விநியோகிக்கக் கூடிய பலம் வாய்ந்த பின்தளமாகவும் வடக்குஅமைந்துள்ளது இந்நிலையில் வடக்கில் புலிகளை நெருக்கடிக்குள்ளாக்குவதன் மூலமே கிழக்கில் அவர்களைப் பலவீனப்படுத்த முடியும் என்று தளபதி சிசில் நம்புவது போல தெரிகிறது இந்தவகையில் கிழக்கில் புலிகளை முறியடிப்பதற்கான போரை வடக்கிலிருந்து ஆரம்பிப்பதே தளபதியின் புதிய வியூகம் எனக் கருதமுடியும் இதனடிப்படையில்தான் ஒபறேஷன் 'ஏழுசக்திகள்' உம், பலவேகய II உம் ஆரம்பிக்கப்பட்டன.

'ஏழுசக்திகள்' இன்போது முல்லைத்தீவு இராணுவம் அலம்பில நோக்கி நகர்ந்தது. இது மணலாறு காட்டிற்கான நுழைவாயிலை இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் நோக்கில் செய்யப்பட்டது புலிகள் மணலாறை இருதய நிலம் என்று வர்ணிக்கிறார்கள் இந்த இருதய நிலத்திலிருந்தே கிழக்கு தனக்கு வேண்டிய குருதியை ஊட்டத்தைப் பெறுவதாக இராணுவம்நம்புகிறதுஎனவே இந்த இருதயத்திலிருந்து கிழக்கிற்கும் வடக்கிற்கும் வரும் போகும் நாடி நாளங்களைத் துண்டிப்பதன் மூலம் கிழக்கை விநியோகங்களற்ற தனிமைக்குள் தள்ளிவிட இராணுவம் விரும்புகிறது இதற்கான முன்னோடி இராணுவ நடவடிக்கைதான் ஒபரேஷன் 'ஏழுசக்திகள்' எனலாம்.

இவ்வாறான மற்றுமொரு முன்னோடி இராணுவ நடவடிக்கைதான் 'பலவேகய II' எனலாம் (இதைத் தளபதி ஹமில்டன், குடாநாட்டுச் சமரிற்கான முன்னோடி இராணுவ நடவடிக்கை என்று கூறியுள்ளார்) பலவேகய II இல், இராணுவம் தனது இலக்குகளை அடையுமானால் குடாநாடு பெருநிலப்பரப்பிலிருந்து துண்டிக்கப்பட்டுவிடும். கடல் நீரேரிவழியாக யாழ்குடாவின் கழுத்தை நெரிப்பதுபோலஇது அமையும்.இதனால் புலிகளின் விநியோகப் பாதைகளையும், பெரிய அளவிலான படைநகர்வுகளையும் நெருக்கடிக்குள்ளாக்க முடியும்என்று இராணுவம் நம்புகிறது.

இந்தவகையில், தளபதி சிசில் பலம் பொருந்தியவராக மாறிய குறுகிய காலத்துள் மேற்கொள்ளப்பட்ட பெரிய இராணுவ நடவடிக்கைகளான 'ஏழுசக்திகள்', 'பலவேகய II' இரண்டுமே ஒருவிதத்தில் முன்னோடி இராணுவ நடவடிக்கைகள்தான். கிழக்கில் புலிகளை முறியடிப்பதற்காக வகுக்கப்பட்ட வியூகத்தின் ஆரம்பங்களாக இவற்றைக் கருத முடியும்.

இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமான புதிதில் முன்னாள் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் (வடமராட்சி ஒபறேஷன் லிபறேஷனில் பங்குபற்றியவர்- பிரிகேடியர் சுனில் பீரிஸ்?) இராணுவத்திடம் புலிகளிற்கு எதிரான நீண்ட கால நோக்கிலானதும் அரசியல்பீடத்தின் குறுக்கீடுகள் இல்லாத நிரந்தரமானதுமான போர்த் திட்டங்கள் இருக்க வேண்டியதின் அவசியம் பற்றிக் கூறியிருந்தார். இரண்டாவது ஈழப்போர் இராணுவத்தை, இலங்கை அரசியலில் இன்றியமையாத தீர்மானிக்கும் சக்தியாக மாற்றியுள்ளது. எனவே அரசியல் பீடத்தின் குறுக்கீடுகளையும் மீறி சுயாதீனமான முடிவுகளிற்கு வரும்பலம் இன்று இலங்கை இராணுவத்திடம் காணப்படுவதாக அவதானிகள் கூறுகிறார்கள். வெற்றிக்காக அவசரப்படாமலும் நீண்டகால நோக்கில் படிப்படியாக, சில சமயங்களில் மெதுவாகவும்சில சமயங்களில் விரைவாகவும் இராணுவம் நகர முயற்சிக்கிறது.இறுதி வெற்றிக்கான வியூகங்களைக் குறித்தே அவர்கள் எப்பொழுதும் சிந்திக்கிறார்கள். சமாதானத்தையும் இத்தகைய வியூகங்களிற்கு உட்பட்டதொன்றாகவே (ஒரு தந்திரோபாயமாகவே) அவர்கள் சிந்தித்து வந்துள்ளார்கள்.

★ ★ ★

# "நெய்தல்" - ஒரு நெடும் பாய்ச்சல்

கடலும்கடல் சார்ந்த நிலமும் நெய்தல் எனப்படும். நெய்தலுக்குரிய ஒழுக்கம், இரங்கல். நெய்தல் நிலத்தில் வாழும் மக்களுடைய தொழில் மீன்பிடிப்பதும் உப்பு விளைவித்தலும் முத்துக்குளிப்பதுமாகும். காற்றோடும் அலையோடும் மல்லாடும் இம்மக்கள் கடலுக்கே இரையாகிப் போவதும் உண்டு. கடலுக்குப் போய் மீளாதகணவனையோ, மகனையோ எண்ணி எண்ணி வாயிலும் வயிற்றிலும் அறைந்து காண்டு பெண்கள் புலம்புவர். இதுவே இரங்கலுக்கான காரணம். இரங்கலைப் புலம்பல் என்றும் கூறலாம்.

இயற்கையின் சீற்றத்துக்கு மீனவர் பலியாவது உலகெங்கும் நிகழ்ந்து வருவதாயினும், அண்மைக் காலங்களில் தமிழ் மீனவர்களை மேலதிகமாகஓர் ஆபத்துச் சூழ்ந்துள்ளது. சிறிலங்கா கடற்படையினர் நம் மீனவர்களை வெட்டியும் குத்தியும் சுட்டுக்கொல்வதும், அவர்களுடைய வள்ளம், வலைகளைச் சேதப்படுத்துவதும், மீனவர் குடியிருப்புகளை அழித்து கொலை, கொள்ளை புரிவதும் வழமையாகி வருகிறது. கொடுங்கோன்மையின் இந்தமுகம் இயற்கையின் கொடுமையைவிட கோரமானது.

எப்படி எமது பாரம்பரிய நிலப்பரப்பை -பிரிக்கப்படாத வடதென்தமிழீழத்தை-நாமே ஆளவேண்டிய அவசியம் இருக்கிறதோ, அதே போலவே தமிழ் மண்ணின் பெரும்பகுதியைச்சூழவுள்ள கடற்பரப்பை நாமே கட்டியாள வேண்டிய தேவையும் இருக்கிறது. தமிழருக்கு இது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. இராசராசன்,



இராசேந்திரன் முதலிய சோழப் பெருமன்னர் பெரிய கடற்படை ஒன்றை வைத்திருந்தது மட்டுமன்றி, ஜாவா, சுமாத்திரா (ஸ்ரீவிஜயம்) முதலிய தூரகிழக்குநாடுகள் வரை சென்று தமது கடலாதிக்கத்தை நிலைநாட்டினார்கள். தமிழ் வணிகர்களுடைய கலங்களுடைய பாதுகாப்பைஉறுதி செய்தார்கள். பாரம்பரியமான மரக்கலமொன்றில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மாலுமிகள் சப்தசமுத்திரங்கள் தாண்டிய அண்மைக்கால வரலாறு மெய்சிலிர்க்க வைப்பது.

தமிழீழ விடுதலைப் போரை ஒடுக்கக் கங்கணங்கட்டி நிற்கும் சிறிலங்கா அரசு தரையிலும், கடலிலும், வானிலும் போர் தொடுக்கிறது. கடற்பாதைகளை மூடி எம்மை நசுக்கப் பார்க்கிறது. எமது மீனவர்களைத் துன்புறுத்துகிறது; கொல்கிறது. இந்நிலையில் உதித்ததுதான் கடற்புலிகள்'அமைப்பு. அதன் ஒருபிரிவு 'கடற்கரும்புலிகள்' உயிரைத் துச்சமாக மதித்து எதிரியின் கப்பல்களையும் சக்திமிக்க படகுகளையும் மோதிச் சிதறடிக்கும் இவர்களுடைய வீரத்துக்கு முன் சிங்களம் திணறுகிறது.

நடந்துகொண்டிருக்கும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் தமிழீழக் கலைஞர்கள் பெரும் பங்காற்றி வருகிறார்கள். விடுதலைக் கீதங்களைத் தாங்கி இது வரை தமிழீழத்தில் எட்டு ஒலிப்பதிவு நாடாக்கள் வெளிவந்துள்ளன. இன்று கடற்புலிகள் அமைப்புக் கலைஞர்களை இணைத்து விடுதலைப் புலிகள் கலை, பண்டாட்டுக் கழகம் உருவாக்கிய 'நெய்தல்' ஒலி நாடா வெளியிடப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இபக்கம் பற்றி விமர்சனம் செய்த 'நியூஸ்வீக்' சஞ்சிகை ''தமிழர் வரலாற்றில் ஓர் உன்னத இடத்தை வகிக்கின்ற சோழப் பெருமன்னர்களுடைய கொடியைத் தமது கொடியாகக் கொண்டுள்ளார்கள்'' என்று குறித்துள்ளது.

''ஆழ்கடலெங்கும் சோழமகராஜன்
ஆட்சி புரிந்தானே அன்று-தமிழ்
ஈழக் கடலெங்கும் எங்கள் கரிகாலன்
ஏறி நடக்கின்றான் இன்று''

என்று எடுப்பாகத் தொடங்குகின்றது நெய்தல். கரிகாலனும் புகழ்பெற்ற ஒரு சோழனே. இமயத்தின் புலி இலச்சினையைப் பொறித்தவன் அவன்- இந்தப் பெருமையை எல்லாம்பாடி அதன் வாரிசாக விளங்கும் எங்கள் கரிகாலன் (தலைவர் பிரபாகரன்) புகழ் பேசுகிறது இவ் இசைப்பா.

''எங்கள் கடல் மீதில்
எதிரி வருகின்ற
இன்னல் இனிமேலும்
இல்லை''

—என்ற நம்பிக்கை தரும் ஒரு முத்தாய்ப்பு. 'கரும்புலிகள்' என்ற யோகியின் பாட்டு பிரபலமானது.

''அம்மாவும் அப்பாவும்
எங்களுக் குண்டு
ஆனாலும் மண்மீதில்
பெரும்பாச முண்டு
ஆறடி மண்கூட
நமக்காகக் கேளோம்''

எனக் கரும்புலிகளின் மன உணர்வுகளை வடித்தது அந்தக் கீதம். ஆறடி மண்ணுக்கு மேல் எதுவும் எதிர்பார்க்காத தரைப்புலிகள். ஆனால் கடற்கரும்புலிகளோ கடலோடு கரைந்து போகிறவர்கள்.

''ஆறடி மண்ணிலும் அடங்கிடோம்''—எனும் கரும்
புலி உணர்வது கேட்குதா''
கடலலையே கொஞ்சம்
நில்லு — தமிழன்
வீரத்தை உலகெங்கும்
சொல்லு''

—என்பது யோகி தரும் நெய்தல்.

மீனவர்கள் கரைவலை இழுக்கிறார்கள். ''ஏலேலோ ஐலசா—ஏலேலோ ஐலசா!'' பரம்பரை பரம்பரையாக அவர்கள் இக்கடலன்னையின் மடியில் தவழ்ந்தவர்கள். ஆசியாவின் கடல் எல்லாம் ஆண்ட தமிழன் அகதியாக உலகெங்கும் அலையும் இழி

## நம்பியாரூரன்

நிலைகண்டு இரங்குகிறார்கள்.

''எந்தையும் தாயும்
மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே''

—என பெருமிதத்தோடு பாடினான் பாரதி.

'அழுது கொண்டும்
தொழுது கொண்டும்
இன்னும் வாழ்வதோ
—எங்கள்
அப்பு ஆச்சி
வாழ்ந்த மண்ணை
எதிரி ஆள்வதோ''

— இது புதுவை இரத்தினதுரையின் உணர்ச்சிகரமான பாட்டு.

''எதிரி வருவானா?
கரையைத் தொடுவானா?
என்று புயலாகி
வென்றோம்—புலி
அதிரும் வெடியோடு
கடலில் நடைபோடும்
அணியில் துணையாகி
நின்றோம்''

—இது புதுவையின் இன்

( 6ஆம் பக்கம் பார்க்க)

## "நெய்தல்'

னொரு ஆவேசப்பாட்டு. ஆம்! தன் உடலைச் சிதறடிக்கின்ற வெடியோடு படகில் போகும் கடற்புலிகளின் துணிச்சலை, தியாகத்தை இணைக்கும் போது யார்தான் சிலையா காதவர். நினைத்துப் பார்க்கின்றோம், சின்னச் சின்னப் பூக்களெல்லர்ம் புயலாகி போக்காலத்தில் நிற்கின்றபூமியல்லவா இது! கூவியழைக்கின்றார் புதுவை இரத்தின துரை,

''பூவும் புயலாகிப்
பாயும் புலியாகி
போரில் குதித்துள்ள
நாடு—தமிழ்
ஈழம் உருவாகும்
வேளை இதுவாகும்
என்று களம் நோக்கி ஓடு'

''கடற்புலி ஒருத்தி கடமையில் ஈடுபட்டிருக்கிறாள். ஆடாமல் அசையாமல் இலக்கினை உற்று நோக்கியபடிசிலையாகி கடல் விம்முகிறது. அலைகள் அவள் கண்களை மறைக்கின்றன.

''அலையே நீயும் பொங்
காதே - என்
இலக்கினை இனியும் மறைக்
காதே''

-உண்மையான அனுபவம் கலையாகும் அழகை ரசிக்கிறோம்.

நெய்தலில் புதுவை இரத்தின துரை எழுதிய நெஞ்சை அள்ளும் மீனவப்பாட்டு ஒன்று வருகிறது

',வெள்ளி நிலா விளக்கேற்
றும் நேரம் - கடல்
வீசுகின்ற காற்றில் உப்பின்
ஈரம்
தள்ளி வலை ஏற்றி வள்ளம்
போகும் - மீன்
அள்ளி வர நீண்டநேரம் ஆகும்
-எல்லாம் இவ்வளவு சுலபமாக முடிவதில்லையே கடலில் நேவிக்காரன் சுட்டுவிட்டால்,

''பேருமின்றி ஊருமின்றி
பெற்றவளின் முத்தமின்றி
ஈர உடல் கரையொதுங்கும்
காலை''

மீனவன் வீட்டு வாசலிலும் கோலம் போட்டிருக்கிறது. என்ன கோலம்? வறுமையின் வேதனையின் கோலம்.

'வாயிறுக்கிவயிறிறுக்கிவாழும் கடல் மீனவரின் வாசலெங்கும் வேதனையின் கோடு''

நெஞ்சைப்பிழியும் சோக பாவத்துடன் ஒலிக்கின்ற இந்தப்பாட்டு நெய்தலின் சிகரம் எனலாம். பாடிய சாந்தனும் சிட்டுவும் பாராட்டுக்குரியவர்கள்.

தமிழீழ விடுதலைப்போரில் நெய்தல் நில மக்களே அதிக இழப்புக்களை சந்தித்தவர்கள் எனலாம். மயிலிட்டி 'தீவகம்', வெற்றிலைக்கேணி, மன்னார், முல்லைத்தீவு இன்னும்பிற பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து தொழிலின்றி அலைபவர்களும் மீனவர்களே

இந்த நோக்கில் மீனவர்களுடைய உணர்வுகளை வெளியிடும் 'நெய்தல்' காலத்தின் தேவையாகவும், தமிழினத்தின் நிகழ்கால ஆவணமாககவும் விளங்குகிறது.

'நெய்தலின் இசையமைப்பைப் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். நவநவமான கற்பனைகள் நடை பேதங்கள் ஒருசில இசைக் கருவிகளைவைத்துக்கொண்டு கேட்போரைக் கிறங்க வைக்கும் இசைக்கோலங்கள் பாடகர்களும் சிறப்பாகவே செய்திருக்கிறார்கள் சாந்தன் கூட ''அடச்கி வாசிக்கிறார். பார்வதி சிவபாதம்பல்லவியை பாடும் பாணியில் ஒரு புதுமை செய்கிறார்.

''நீலக்கடலே நெடுகன் நிலவே'' என்றகீதம் மழலைக் குரலில் இழைகிறது.

''கடலலையே கொஞ்சம் நில்லு'' ஒரு ''முல்லை''முத்திரை ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில்இதுவரை வெளி வந்த விடுதலைக்கீதங்களில் 'நெய்தல்' ஒரு - ''உச்சத் தாவல் - நெடும் பாய்ச்சல்

## விழுதுகள்

வீச்சுவிமானங்கள் இவர்கள் செல்லும் திசையை நோக்கி வட்டமிட்டு குண்டு வீச்சுக்குத் தயாராகிக்கொண்டிருந்தது. இதனைக் கவனித்த கீதா தன் தோழிகளிடம் பாதுகாப்பு நிலை எடுக்குமாறு கூறுகின்றாள்.

அந்தநேரம் விரைவாகவந்த குண்டுவீச்சு விமானங்கள் இரண்டும் இவர்கள் பாதுகாப்பு நிலை எடுத்திருந்த இடத்திற்கருகில் பதிந்து சென்றது. அப்பகுதி முழுவதும் ஒரே புகை மண்டலமாக இருந்தது. கீதாவும் அவளுடன் இருந்த மூன்று தோழிகளும் வவுனியா மண்ணிலே சாவுடன் சங்கமமாகின்றனர்.

இறுதி மூச்சுவரை இலட்சிய தாகத்திற்காகவே, களத்தில் போராடி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இவ்வேங்கைகளின் கனவுகளை நனவாக்க விடியலைக்காண பல்லாயிரக் கணக்கானோர் அணிவகுத்து நிற்பார்கள். எமது மண்மீட்கப் படும்வரை துப்பாக்கிகள் தூங்கப்போவதில்லை.

சோபனா

★ ★ ★

## ரோபோக்கள் ஏற்படுத்தும் சாதனை

விஞ்ஞான யுகத்தில் ரோபோக்கள் ஏற்படுத்தும் சாதனைகள் அளப்பரியன. துவிச்சக்ர வண்டியில் அதிகமாகச் செல்லவும் வேகத்தை கட்டுப்படுத்திக் கொள்ளவும் அதிகளவு ரோபோக்களை யப்பானிய நிறுவனம் ஒன்று தயாரித்துள்ளது.

எலற்ரோனிக் கருவியினால் இயக்கப்படும் இந்த துவிச்சக்கர வண்டி ஒரு செக்கனுக்கு 50 சென்ரி மீற்றர் ஓடக்கூடியதாக உள்ளதாம்.

பின்புறமாக பொருத்தப்பட்டிருக்கும் கறுத்தப் பெட்டியில் அதன் இயக்கத்திற்குரிய கட்டுப்பாடுகள் யாவும் அமைந்துள்ளனவாம்.

இந்த துவிச்சக்கர வண்டி சுயமாக இயங்கக் கூடியதும் அத்துடன் எதிரும் புதிரும் நின்று செயலாற்றக்கூடியதாகும். இயக்கப் பெட்டியிலுள்ள சக்தி மின் சக்தியிலும் பார்க்க குறைந்த செலவில் இயங்குகிறதாம்.

மனித உயிர்கள் ஆபத்தை எதிர்நோக்கும் ஆய்வுகளுக்கு இந்த ரோபோக்கள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன.

சமுத்திரத்தின் அடியிலும் விமானங்கள், ஹெலிகொப்டர்களிலும் இவை பயன்படுத்தப்பட்டு புகைப்படங்கள் எடுப்பதற்கு பெரும்பாலும் பயன்படுகின்றன.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 03 - 09 - 1972 | 10 - 07 - 1990 |

**வீரவேங்கை சீனிவாசன்**
(செல்வராசா - உமையாளன்) (ஈசன்)

ஈசனே நீ இவ்வுலக வாழ்வை நீத்து
ஈராண்டு காலம் இறந்து போனது
நித்திரைக்குப் போனாலும்
எங்களுக்கு நிம்மதியே இல்லை ஐயா!
தாயக மீட்பில் மயிலிட்டி மண்ணில்
மாவீரனாகி குலமானம் காத்திட்டாய்
ஆயிரம் தான் சொன்னாலும்
ஆறிடுமோ நம் துயரம்.

எல்லாம் வல்ல ஐயப்பன் பாதார விந்தத்தில்
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

ஐயனார் கோயிலடி,
மல்லாகம்.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அக்கா,
அண்ணா, தம்பி, உறவினர்,
நண்பர்கள்.

(2782)

## ஓராண்டு நினைவஞ்சலி





**லெப். சித்திக்**
(தவானந்தவேல்
விக்கினேஸ்வரன்)

**லெப். லக்ஷ்மன்**
(தவானந்தவேல்
குகதீஸ்வரன்)

| தாயின் மடியில் | ஆனையிறவு மண்ணில் | தாயின் மடியில் | ஆனையிறவு மண்ணில் |
|---|---|---|---|
| 1973.10.20 | 1991.07.10 | 1975.09.15 | 1991.07.11 |

நல்லூரான் வாசலிலே நாடி நரம்பு
சோர்ந்த வேளையிலும்
தீரமுடன் எடுத்துரைத்த தீந்தமிழ்
அன்னை நிலைபற்றி
வேகமுடன் ஏற்றார் புலி வேதத்தை
வேங்கையர் சேனையில் முறையாகப் பயின்று
அன்னை என் மடி மீதமர்ந்து ஆணையிட்டான்
தமிழ் அன்னைக்கு
கோட்டையிலே கொடி ஏற்றினான்
எதிரிகள் பாசறைகள், படுகளங்கள்
பல புகுந்து,
ஆனையிறவில் அண்ணன் வழி நடத்தலில்
உடல் பொருள் ஆவி அத்தனையும்
அர்ப்பணித்தனர்
புத்திர சோகத்தால் புரண்டாலும்
புறநானூற்று வீரம் கண்டு
புகழ்ந்திடுவேன் மழலைகள் உங்கள்
வீரத்தை
இன்றுவரை இன்னுயிரை உவந்தளித்த
மாவீரர்களுக்கு,
உங்கள் வழி செல்வோம் என
உறுதி கூறுகின்றோம்

தெணியம்பை, ஜெயபாஸ்கரா வீதி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்

(சி 4658)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 25 - 07 - 1975 | 10 - 07 - 1991 |

**வீரவேங்கை திலகன்**
(திருச்செல்வம் கஜேந்திரன்)

பாதினாறு வயதுப் பருவத்தில்
பாலகன் நீ எமக்கு
எதிரிகளைத் தேடி எல்லைவரை
சென்றதனால் மண் மீதில்
மாவீரன் என்றே தேசம்
உன் பெயர் சொல்ல
புவி மீதில் உன் புகழ் பாடி
நாமும் அவ் வழியில்.

– குடும்பத்தினர்

பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

(2783)

# ராணுவத்தின் முதுகெலும்பாக டாங்கிப்பிரிவு; எதிர்கொள்ளும் புலிகளின் புதிய யுக்தி

சிறிலங்கா இராணுவம் வடக்கில் இன்று மேற்கொள்ளும் தாக்குதல்களில், கவசப் படைப்பிரிவின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. சீனாவிடமும், செக்கோசெலவோக்கியாவிடமும் வாங்கியடாங்கிகள் சிறிலங்கா படையணிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டதே கவசப்படைப்பிரிவின் முக்கியத்துவத்திற்குக் காரணமாகும். கடந்த வருடம் வரையும் கவசப் படைப்பிரிவு என்பது பெரும்பாலும் ஒரு துருப்புக்களைக் காவிச் செல்லும் ஓர் படைப்பிரிவாக இருந்தது. அப்பொழுது பாவனையில் இருந்த கவசப் படைப்பிரிவு வாகனங்களும் அவற்றிற்கு ஏற்றவையாகவே இருந்தன.

ஆனால், தற்பொழுதுசீனாவிலும் இருந்தும், செக்கோசெலவோக்கியாவிடமும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட டாங்கிகள் சிறிலங்கா கவசப் படைப்பிரிவை ஒரு தாக்குதல் படைப்பிரிவாகவும், முன்னணிப்படைப் பிரிவாகவும் மாற்றியுள்ளது. அத்தோடு, சிறிலங்கா இராணுவத்தினரின் நம்பிக்கைக்குரியதுமான ஒரு படைப்பிரிவாகவும் உள்ளது.

தற்பொழுது வடக்கில் நடை பெறும்இராணுவ தாக்குதல் நடவடிக்கைகள் குறித்துப் பத்திரிகையாளரிடம் பேசிய இராணுவத் தளபதி ''யாழ். குடா நாட்டில் பல முனைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்தாக்குதல்கள் இறுதித் தாக்குதல்கள் அல்ல, ஆனால், முன்னைய நடவடிக்கைகளைவிடக்கடினமானது'' என்றார். இராணுவத்தளபதி கடினமானதாக இருக்கும் எனக் குறிப்பிட்டமை சிறிலங்கா படையணிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட டாங்கிகளையும், விமானப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட எப் - 7 குண்டுவீச்சு ஜெட் விமானங்களின் தாக்குதல் திறனையும் கொண்டே என அவதானிகள் கருதுகின்றார்கள்.

கடந்த வருடம் வடக்கில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட போர் அனுபவங்களே கவசப்படைப் பிரிவில் டாங்கிகளின் முக்கியத்தை சிறிலங்காவிற்கு உணர்த்தியிருந்தன. சிறிலங்கா கவச படைப்பிரிவில்இடம் பெற்றிருந்த சளாடின் பவல் போன்ற துருப்பு ஏற்றிகளும் மென்ரக பீரங்கி வண்டிகளும் இரப்பர்களினால் ஆன சில்லுகள்கொண்டவை. இவைமணற்பரப்பான தரையமைப்பைக் கொண்ட போர் முனைகளில் போரிட ஏற்றவையாகஇருக்கவில்லை. இதனால் துருப்புக்களுக்குப் பலத்த சேதமும் ஏற்றன. இந்நிலையில், டாங்கிகள் கொள்வனவு செய்வதற்கும், அதில் பயிற்றுவிப்பதற்கும் முதன்மையும் அளிக்கப்பட்டது.

> புலிகள் இராணுவத்தை எதிர் கொள்ளுதலும், தவிர்த்தலும் அவதானமாக மேற்கொள்ளப்படும் ஒரு தந்திரோபாயமாக மாறியுள்ளது. இது ''இயலுமான அளவு புலிகளைக் கொல்லுதல்'' என்ற சிறிலங்கா இராணுவத்தின் நோக்கத்திற்கு முட்டுக்கட்டையாகவுள்ளது.

சிறிலங்கா இராணுவ அணிகளில் டாங்கிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டதும், முதல் முதலாக இவ்வருட ஆரம்பத்தில், வவுனியாவில் நடைபெற்ற தாக்குதல் நடவடிக்கையில், அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் இராணுவ நடவடிக்கையை எதிர்கொண்டு புலிகள் பெரும் தாக்குதல்களிலும் ஈடுபடவில்லை. இராணுவத் தரப்பும் இதை ஒரு பரீட்சார்த்த நடவடிக்கை எனவே அறிவித்தது.

இரண்டாவதாக இவ் வருடம் மார்ச் மாதம் மணலாற்றில், டாங்கிகள் பயன்படுத்தப்பட்டது. 'ஒப்பரேசன் சிக்சர்' எனப் பெயரிடப்பட்ட இந்தராணுவநடவடிக்கையை புலிகள் எதிர்கொண்டு தாக்குதல் நடத்தினார்கள். இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட அன்றே புலிகளின் அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஒரு சீன தயாரிப்பு ரி-55 டாங்கி உட்பட ஆறு இராணுவ வாகனங்கள்-கவச வண்டிகள் உட்பட - அழிக்கப்பட்டன. 106 எம். எம். பின்னுதைப்பற்ற பீரங்கி ஒன்றும் புலிகளால் கைப்பற்றப்பட்டது. புலிகளின் எதிர்பாராத இத் தாக்குதல் 'ஒப்பரேசன் சிக்சரை' ஆரம்பத்திலேயே தோல்வியுறச் செய்தது.

அடுத்து மே மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட சண்டமாருதம், ஏழு சக்திகள் ஆகிய நடவடிக்கைகளிலும் யூன்மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட்ட 'ஒப்பரேசன் பலவேகய 2 நடவடிக்கைகளிலும் டாங்கிகளைச் சிறிலங்கா இராணுவம் பயன்படுத்தியது. இதில் சண்டமாருத நடவடிக்கையின்போது ஒரு டாங்கியையும், பலவேகய 2 நடவடிக்கையின்போது இரண்டு டாங்கியையும் சிறிலங்காவின் இராணுவ த்தரப்புஇழந்தது. இவை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களினால் உறுப்படுத்தப்பட்டவையாகும். இதே வேளை, இவ் இராணுவ நடவடிக்கையின் போது பல கவச வாகனங்களையும், ட்ரக், ஜீப், வண்டிகளையும் இராணுவம்இழந்துள்ளது; மேலும் சில டாங்கிகள் சேதத்திற்கும் உள்ளாகியுள்ளன.

இதேவேளை விடுதலைப் புலிகளும், தமது கடந்தகாலப் போர்அனுபவங்களையும், சிறிலங்கா இராணுவத்தில் ஏற்பட்ட தளபாட மாற்றங்களுக்கு ஏற்பவும் தமது போர் யுக்திகளை மாற்றியமைத்துக் கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் புதிய போர் யுக்திகளில், டாங்கி எதிர்ப்பு அணியினர் போர்முறையில்முன்னணியில் உள்ளதாக அண்மைக் காலத்தில், யுத்த களங்களில் இருந்துகிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், விடுதலைப்புலிகள் புதியதந்திரோபாயத்தின்படிஎதிரியைதேடிச் சென்று தாக்குவதைவிட சாதகமான நிலைகளில் வைத்து தாக்குவது தந்திரோபாயமாக மாறியுள்ளது.

அண்மையில், யாழ். குடாநாட்டில் நடைபெற்ற இரண்டு பாரிய இராணுவ நடவடிக்கைகளில் இருதரப்பினருக்கும் ஏற்பட்ட இழப்பைக் கொண்டே இதனை விளங்கிக் கொள்ளமுடியும். ஒப்பரேசன் சண்டமாருதத்தில், சேந்தான் குளம் மீதான தாக்குதலின் போது சுமார் 35 இராணுவத்தினர் ஒருநாள் மோதலில் கொல்லப்பட்ட வேளையில் மூன்று புலிகள் மட்டுமே மரணமடைந்திருந்தனர். இதே வேளை, சில இராணுவ வாகனங்களும் புலிகளால் தகர்க்கப்பட்டிருந்தன.

இதேபோன்றே ஒப்பரேசன் பலவேகய 2 இராணுவ நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகளைவிட இராணுவம்இரண்டு மடங்கிற்கும் மேலான இழப்பைச் சந்தித்தது. இராணுவத்தரப்பில் சுமார் 90 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். 300 பேருக்குமேல் காயமடைந்தனர். இப் போரில் புலிகள் தரப்பில் சுமார் 40 புலிகள் வரையிலுமே மரணமடைந்தனர். சுமார் 100 பேர்வரையில் மட்டுமே காயமடைந்தனர். இந்தபோதே சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் பலமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டன கொழும்பு பத்திரிகைகளும் அதற்கு முதன்மை வழங்கியுள்ளன. தற்பொழுது புலிகளின் டாங்கி எதிர்ப்பு பிரிவு பற்றி இராணுவ வட்டாரங்கள் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. ஒப்பரேசன் பலவேகய II இராணுவ நடவடிக்கை படையின் முன்னேற்றத்திற்கு இப் பிரிவினர் பெரும்தடையாக இருந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது.

ஒப்பரேசன் பலவேகய 11 ஆரம்பிக்கப்பட்டபோது இரு முனைகளில் முன்னேறும் திட்டத்தினையே இராணுவம் கொண்டிருந்தது, புல்லாவெளிப்பகுதியில் புலிகளின் பலமான எதிர் தாக்குதல் மூன்றாவது போர்முறை ஒன்றைத்திறக்கவேண்டிய நிர்ப்பந்தத்தையும் உருவாக்கியது.

> சிறிலங்கா இராணுவ கவசப்படைப் பிரிவில் டாங்கிசள் சேர்க்கப்பட்டமை, அதனை துருப்புக்களை காவிச்செல்லும் படைப்பிரிவு என்றநிலையில் இருந்து தாக்குதல் படைப்பிரிவாக மாறியுள்ளது. இது புலிகளின் டாங்கிஎதிர்ப்பு பிரிவை எதிரியைஎதிர்கொள்ளும்முன்னணிதாக்குதல் பிரிவாக செயற்பட வைத்துள்ளது.

நிலையானது, 1991 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆனையிறவுப்போர், மணலாற்றுப்போர் என்டனவற்றின் இழப்புக்களுடன் ஒப்பிடும் இடத்து தலைகீழான மாற்றம் கொண்டதாகும்.

அதாவது புலிகளின் புதிய யுத்த தந்திரோபாயத்தில் எதிர்கொள்ளுதலும் தவிர்த்தலும் தந்திரோபாய ரீதியானதாக மிகவும் அவதானமாக மேற்கொள்ளப்படும் ஒன்றாகவே மாறியுள்ளது, இதன் காரணமாக பெருமளவில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல்களும் புலிகள் தரப்பில் பாரிய இழப்பை ஏற்படுத்தவில்லை.

விடுதலைப் புலிகளின் டாங்கி எதிர்ப்புப் பிரிவுபற்றி 'ஒப்பரேசன் சிக்சர்' நடவடிக்கை தோல்வியில் முடிவடை இவ்வாறு நிர்ப்பந்தம் ஒன்று உருவாவதற்கு கவச வாகன அணியின் முன்னேற்றத்தை புலிகள் தடுத்து நிறுத்தியமையும் ஒரு காரணமாகும்.

அதாவது எதிர்கொள்ளுதலும் தவிர்த்தலும் என்னும் புலிகளின் தந்திரோபாயம்இராணுவத்தரப்பினருக்கு ''புலிகளால்இயலுமானவரை கொன்றொழித்தல்'' என்னும், அடிப்படைப் போர் யுக்திக்கும் எதிர்மறையான தொன்றாக மாறியுள்ளது. அதேவேளை, சிறிலங்கா காலாட்படையின்முதுகெலும்பாக மாறியுள்ள சீன டாங்கிகளுக்கு புலிகளின் கையிலுள்ள டாங்கி எதிர்ப்பு எறிகணைகளை விட மன உறுதி சவாலாக மாறியுள்ளது என்றால் மிகையில்லை.

**ஜெயராஜ்**

---

# வீதி ஒழுங்கு குறித்து காவல்துறையினர் விளக்கம்

''வீதி விபத்துக்களைத் தடுக்க ஒத்துழைப்புத் தாருங்கள்'' என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரமொன்றினை தமிழீழ காவல் துறையினர் வெளியிட்டுள்ளனர்.

வீதிப்போக்குவரத்தில் ஏற்படும் விடத்துக்களையும், உயிரிழப்புகளையும், வாகனங்கள் பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்கவும் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விதிமுறைகள் குறித்து அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் வருமாறு;

★ வீதிகளில் நடந்து செல்வோர் தமது வலதுபக்க ஓரமாக நடக்கவேண்டும். இதனால் தம் எதிரே வரும் வாகனங்களை அவதானித்து நடையைத் தொடரலாம் வீதியின் இடது பக்கமாக நடந்தீர்களானால், உங்கள் பின்னால் வரும் வாகனங்களை அவதானிக்க முடியாது.

★ வீதிகளில் வாகனங்களில் செல்லும் போது உங்களின் இடது பக்கத்தை உபயோகிக்கவும் அதாவது வீதியின் மையக்கோட்டிற்கு இடப்பக்கம் வலதுபக்கம் எதிரே வருபவர்களுக்கு மட்டும் என்பதை மறக்க வேண்டாம். போக்குவரத்து அதிகமான நேரத்திலும் சரி, குறைந்துள்ள நேரத்திலும் சரி உங்கள் பக்கம் இடது பக்கம் தான் என்பதை மறக்கவேண்டாம்.

★ துவிச்சக்கர வண்டியில் செல்லும்போது ஒருவரோடு ஒருவர் பக்கத்தில் (சமாந்தரமாக) அளவளாவிக் கொண்டு போகவேண்டாம். ஒருவர் பின் ஒருவராகச் செல்லுங்கள்.

★ முன்னே செல்பவரைக் கடக்கும் போது (முந்திச் செல்ல நேரிடும் போது) ஒரே நேரத்தில் (சமாந்தரமாக) முந்திச் செல்லாதீர்கள்.

★ சந்திகளில் (3, 4 வீதிகள் சேரும் இடம்) திசை மாறும் வேளைகளில் எச்சரிக்கையாக இருங்கள். உங்களின் வலது கைப்பக்கம் திரும்பவேண்டிய போது சந்திக்கு 50 யார் முன்னதாகவே உங்களின் வலது கையைக் குறுக்காக நீட்டி பின்னால் வருபவர்களுக்கும், எதிரே வருபவர்களுக்கும் எச்சரிக்கை கொடுத்த வண்ணமே வீதியின் மையக் கோட்டருகே வந்து சந்தியின் மையத்தைச் சுற்றி தொடர்ந்தும் 50 யார் சென்று பின்னர் இடது பக்கம் தொடருங்கள்.

★ வீதிகளில் நீங்கள் விரும்பிய நேரங்களில் ஓடிக்கொண்டிருக்கும் துவிச்சக்கர வண்டிகளையோ, பெரிய வாகனங்களையோ திடீரென நிறுத்திப் பின்னால் வருபவர்களைஆபத்தில் சிக்க வைக்காதீர்கள். தேவையாயின் இடதுகையைக் குறுக்காக காட்டி இடதுகரைக்கு வந்து நிறுத்துங்கள். இந்த விதிமுறைகளை எந்த நேரங்களிலும் எல்லா வீதிகளிலும் கடைப்பிடியுங்கள்.

★ கடைகளின்முன்னாலும், வீட்டுப்படலைகளின் முன்னாலும் துவிச்சக்கர வண்டிகளையோ மற்றும் வாகனங்களையோ நிறுத்தும் போது வீதிக்குக் குறுக்கே நிறுவதுவதைத் தவிர்க்கவேண்டும். இயலுமானவரை வீதியின் ஓரத்தில் நிறுத்துங்கள்.

★ சிறு வீதிகளில் இருந்து வெளிவந்து பெருஞ்சாலைகளில் ஏறும்போது எல்லாத் திருப்பங்களிலும் (முடக்குகளிலும்) எச்சரிக்கைஒலியை ஒலிக்கச் செய்யுங்கள்.

★ இடதுபக்கம் செல்ல வேண்டுமயின் இடது பக்கம் மூலையோடுதிரும்புங்கள்.

★ இதேநேரம் வலது பக்க திரும்பவேண்டும் என்றால் நீங்கள் வருகின்றவீதியோ, ஒழுங்கையோ எதுவாயினும் அதன் மையக்கோட்டில் வந்து நின்று மேலே தொடருங்கள்.

★ கண்டிப்பாகத் துவிச்சக்கர வண்டியையோ, மோட்டார் வண்டியையோ மற்றவர்களை அச்சுறுத்தும்படி ஓட்டாதீர்கள்.

---

அமைச்சருடன்

வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த விடயம் தொடர்பாக கொழும்பில் வழக்குத் தொடர யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலைகளின் புழைய மாணவர் சங்கங்கள் நிதி உதவி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

கூட்டுறவு

வினரிடம் ஒப்படைத்துள்ளார்.

இவரது மறைவையொட்டி நேற்று தீவக கூட்டுறவுச் சங்கங்கள் மூன்றினதும் கிளைகளும் அலுவலகங்களும் மூடிக் கிடந்தன. (88)

---

பத்து நாட்களில்

சின்னத்துரைதிருச்செல்வம்(37 வயது, ஓடக்கரை, பருத்தித் துறை), புவனேஸ்வரி நாகராஜா (29 வயது, கலாசாலை வீதி, திருநெல்வேலி), பெனடிக் குணரெத்தினம் (43 வயது, கொழும்புத்துறை, மணியந் தோட்டம்) மற்றும் தென்மராட்சியிலும் ஒருவர் மரணமடைந்துள்ளார். (பா)

தீவக-யாழ். உதவி அர. அதிபர் பிரிவுகள்

# இணைப்பைக் கண்டித்து யாழ். செயலகம் முன் மறியல்

(புங்குடுதீவு)

தற்போது தனித்தனியாக இயங்கும் தீவக உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை யாழ். மாவட்டத்துடன் இணைப்பதென எடுக்கப்பட்டுள்ள முடிவைக் கண்டித்து மேற்படி நிறுவனங்கள், அவற்றின் தொழிற்சங்கங்கள் இணைந்து யாழ். செயலகத்தின் முன் மாபெரும் மறியல் போராட்டம் ஒன்றை நடாத்த ஆயத்தம் செய்து வருவதாக தெரிய வருகின்றது.

இடம் பெயர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழும் தீவக மக்களுக்கு குறிப்பிட்ட இணைப்பானது பாதகமானதாக அமையலாம் என்று கருதப்படுவதனாலேயே அதனைக் கண்டித்து இம் மறியல் போராட்டம் ஒழுங்கு செய்யப்படுவதாக கூறப்படுகிறது. தீவகத்தின் சமூக அமைப்புகளும் தீவக மக்களை அணி திரட்டி இம் மறியல் போராட்டத்தை திறம்பட நடாத்துவதற்கு முனைப்புடன் செயலாற்றி வருகின்றன என்றும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (22)

## வியாபாரியைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிப் பகுதிக்கு மண்ணெய் வாங்க சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் இதுவரை வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஊரியான் பகுதியில் மண்ணெய்யுடன் வந்து கொண்டிருந்த இரத்தினம் செல்வேந்திரன் (வயது 37) என்ற மல்லாகத்தைச் சேர்ந்தவரே காணாமல் போயுள்ளார்.

இவருடன் கூடவந்தவர் தகவல் தருகையில் ஊரியான் பகுதியில் வந்து கொண்டிருந்த போது இடை நடுவில் இராணுவத்தினர் தம்மை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாகவும் தான் தப்பி பற்றைக் காட்டுப்பகுதிகளூடாக வந்து சேர்ந்ததாகவும் மேற்படி நபருக்கு என்ன நடந்ததென்று தெரியாது எனவும் கூறினார்.

மேற்படி சம்பவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றுள்ளது. (ச), (க)

## அமைச்சர் சிதம்பரம் இராஜினாமா

(டில்லி)

மத்திய வர்த்தக அமைச்சர் ப. சிதம்பரம் தமது அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்வதாகஅறிவித்துள்ளார்.

நிதிநிறுவனம்ஒன்றில் தனது பெயரிலும், தனது மனைவியின் பெயரிலும் இரண்டரை இலட்சம் இந்திய ரூபாவை முதலீடுசெய்திருப்பதால்தான் பதவி விலகுவதாக ப. சிதம்பரம் பிரதமமந்திரி பி. வி. நரசிம்மராவுக்கு அறிவித்துள்ளார்.

## 18 வேங்கைகள்

கொத்தியாகாடு தொண்டமானாறு), வீரவேங்கை ஜெகதீசன் (டானியல் அருளம்பலம் கிருபாகரன் 7 ஆம் வட்டாரம் சம்பூர் திருக்கோணமலை), வீரவேங்கை அறிவொளி (தங்கலிங்கம் சிவகுகன் அளவெட்டி வடக்கு, அளவெட்டி), வீரவேங்கை சேந்தன் (பரஞ்சோதி நிரஞ்சன் கொச்சடித் தோட்டம், அல்வாய் வடக்கு, அல்வாய்), வீரவேங்கை அன்பழகன் (பழனி கோபாலர் விஸ்வேஸ்வரன் கருகம்பானை, கீரிமலை), வீரவேங்கை இளையவன் (பாலு அந்தோனிப்பிள்ளை செல்வகுமாரன், கைதடி, வடக்கு, நவபுரம்), வீரவேங்கை தில்லானா (கௌரி கருப்புசாமி ஆட்காட்டி வெளி, வட்டக்கண்டல், மன்னார்) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இயக்கச்சிப்

பெற்றது. இந்நிலையிலும் விடுதலைப் புலிகள்வீராவேசமாக இராணுவத்தை எதிர்த்துப் போரிட்ட வண்ணமுள்ளனர்.

இச்சண்டையில் இராணுவத்திற்குப் பாரிய உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் டாங்கி ஒன்றும் புலிகளால் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டது. இறுதியாகக் கிடைத்த செய்திகளின் படி இயக்கச்சிச் சந்திக்கு அருகாமையில் தொடர்ந்தும் மோதல் இடம் பெறுவதாகத் தெரியவருகின்றது,

---

எங்கள் குலவிளக்கு அணைந்துவிட்டது!

மலர்வு : 03 — 02 — 1917



உதிர்வு : 06 — 07 — 1992

காலஞ்சென்ற முகாந்திரம ১, P. இராசநாயகம் அவர்களின் 'அன்பு மனைவி'

### திருமதி பத்மாவதி இராசநாயகம் அவர்களின் மறைவு குறித்த கண்ணீர் அஞ்சலி

அன்னாரின் பூதவுடல் 7-7-92 அன்று மாலை 6.00 மணியளவில் கொழும்பு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எங்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டி, எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வத்தாயே! எங்கள் மீது நீங்கள் அள்ளிச் சொரிந்த பாசமிகு அன்னையாய், அறிவுரைகள் வழங்கும் ஆசானாய், நோய் தீர்க்கும் மருத்துவராய் அம்மாவாய், அத்தையாய், அம்மம்மாவாய் வாழ்ந்து தாலாட்டி, சீராட்டி, பாராட்டி எங்களைஅரவணைத்து வளர்த்து இன்று அமரத்துவம் எய்தியதாயே!

எங்களின் கண்ணீரால் உங்கள் பாதங்களைக் கழுவுகின்றோம்,

அன்னையின் ஆன்மா ஆடவல்லான் திருவடியில் அமைதியுறப் பிரார்த்தித்துநிற்கும்

19/1, B. A. தம்பிலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (2786)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்

---

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1960 08 20



ஆண்டவன் அடியில் 1991 07 10

### செல்வன் சபாரத்தினம் குகநேசன்

அன்பின் சிகரமாய் அறிவின் பிறப்பிடமாய்
அழகின் இருப்பிடமாய் வாழ்ந்த குகநேசா
பாருக்குள் பாங்காக வாழ்ந்து விட்டு
அளவிலாக் கண்ணீரை விழிதனிலே நிறைத்துவிட்டு
எட்டாத இடத்திற்கு ஏன் சென்றீர்
ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவலைகள்
எம்மனதில் நீங்காது நிலைத்து நிற்கும்.

அ. சபாரத்தினம்
(நேசன்) சிவநேசன்வீதி வீதி,
நீர்வேலி வடக்கு.

உன்பிரிவால் துயருறும்
அன்பு ஐயா, அம்மா
தம்பிமார், தங்கைமார், ஆச்சி

(2787)

---

இந்தியக் குழுவிற்கு அனுமதி மறுப்பு

# சிறிலங்காவின் நிலைப்பாடு இந்தியாவிற்கு விளக்கம்

(கொழும்பு)

ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பான குற்றம் சாட்டப்பட்டவர்களை இந்தியாவிடம் ஒப்படைப்பது தொடர்பானபேச்சுவார்த்தை நேற்றுக் கொழும்பில் இந்திய வெளியுறவு அமைச்சர் எட்வேர்ட்டா கிளேறோக்கும் சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் ஹேரல்ட் ஹேரத்துக்குமிடையில் நடைபெற்றது.

சிறிலங்காவில் நடைமுறையிலிருக்கும் குற்றம் சாட்டப்பட்டவர்களை ஒப்படைக்கும் சட்டத்தின் கீழ் இந்தியக்குழுவின் சிறிலங்கா விஜயத்தை அனுமதிக்க முடியாத அரசின் நிலைப்பாட்டை அமைச்சர் ஹேரல்ட் ஹேரத் பேச்சுவார்த்தையின்போது தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு வந்திருந்தார்.

---

# மரண அறிவித்தல்கள்

## வீரவேங்கை அன்பழகன்

(பழனி)

(கோபாலர் விஸ்வேஸ்வரன்)

கருகம்பனையைச் சேர்ந்த காலஞ்சென்ற சி. கோபாலர் (முன்னாள் அதிபர், மட்./பெரியகல்லாறு ம. வி.) பத்மினி கோபாலர் (ஆசிரியை, யா கன்னியர் மடம் ம. வி.) ஆகியோரின் அன்புப் புதல்வனும், சிற்சபேசன் (யாழ். பல்கலைக்கழக பௌதிகத்துறை) மைதிலி (ரஷ்யா), வீரமரணமடைந்த லெப். நெல்சன் (கோபாலர் சுந்தரேசன்), நடேஸ்வரன் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10-07-92 இன்று நடைபெறும்.

தகவல்:
திருமதி பத்மினி கோபாலர்

198, கோயில் வீதி,
கைலாச பிள்ளையார் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம். [2790]

## வீரவேங்கை வீமா

(ரவீந்திராதேவி தங்கராசா)

(சென். திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி)

காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தங்கராசா, தங்கராசா மகேஸ்வரியின் அன்புப் புதல்வி ரவீந்திராதேவி (வீமா) 09-07-92 இல் கட்டைக்காட்டு மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவர் கலாதேவி, கலாமோகன் (போராளி அப்பாச்சி), தர்மகுலதேவி (போராளி சுவேந்தி), பாஸ்கரமோகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசுப்பிரமணியத்தின் மைத்துனியுமாவார். அன்னாரின் புகழுடல் இன்று நவக்கிரியிலுள்ள அவர்களது இல்லத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

நவக்கிரி,
புத்தூர். [2789]

தகவல்: ஆ. நடராசா
(சிறிய தந்தை)

---

## கண்ணீர் அஞ்சலி

மல்லாகம் நீலியம்பனையைச் சேர்ந்த வீரவேங்கை குமரவேல் [குட்டி] என்றழைக்கப்படும் சிவப்பிரகாசம் பிரம்மசீலன் 9-07-92 இல் கட்டைக்காட்டில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- நீலியம்பனை வாழ் மக்கள்

(2791)

---

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

09. 07. 1992

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம் 4791

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகனஇலக்கங்கள்:- 26-6029, 22-6691, 27-8160, 42-3732, 41-9997, 26-2355, 26-9611, 42-1325, 26-2585, 24-9713, 41-5173, 26-2941, 25-8556, 36-3530, 25-7930, 36-8049, 25-6207, 25-63 9, 25-1958, 36-8284, 36-9728, 26-8936, 26-2291, 26-6077, 26-2502, 24-8391, 26-3183, 26-5505, 24-5015, 26-5576, 26-3146, 27-1072, 42-5080, 40-5216, 36-6229, 36-4144, 36-4185, 36-1100, 36-779, 25-9215, 70-5378.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:- 26-4727, 42-7312, 42-6513, 22-3611, 41-6933, 27-9105, 27-6583, 40-3073, 24-5774, 26-1791, 24-9676, 24-3897, 26-1735, 26-4874, 24.4189, 41-6686, 26-5181, 36-380, 25-8805, 37-4077, 36-8312, 25-317, 70-8797.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.